**உள்ளடக்கம்** **பக்கம்**


- ஆளுகைக் குறிப்பேடு 02
- ஆளுகைப் பேரவை உறுப்பினர்கள் 04

  கணக்காய்வு மற்றும் முகாமைக்குழு உறுப்பினர்கள் 05
- ஆணையை மீள்நோக்குதலும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆற்றல்களை மேம்படுத்துவது பற்றிய தொடர்புகளும்
  - அ) ஆணை 06-08
  - ஆ) தூரநோக்கு, பணி மற்றும் நோக்கங்கள் 08
  - இ) SLILG யின் ஆலோசனைச் சேவைகள், இலக்குக்குழு 09
  - ஈ) கூட்டிணைப்பும்,மேற்பார்வையும்,வர்த்தகமேம்பாடும் 10-13

    தேசிய,சர்வதேசப் பயிற்சி மற்றும் கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு, SLILGயின் முகாமைக் கூட்டமைப்பு, உதவும் பணியாளர்களின் விரிவாக்கம்.
- 2011ம் ஆண்டில் நிறுவனத்தின் ஆளணி நிலைமை 14
- 2011ம் ஆண்டில் நிறுவனத்தின் செயற்பாடு 15

  அ. மானிட வளங்கள் அபிவிருத்திப் பிரிவு 17

  ஆ. பொறியிற் பிரிவு 18

  இ. பொதுமுகாமைத்துவப் பிரிவு 19

  ஈ. பௌதிகத் திட்டமிடல் பிரிவு 20

  உ. நிதி முகாமைப் பிரிவு 21

  ஊ. சட்டப் பிரிவு 22

  எ. மாகாணப் பயிற்சித்திட்டங்கள்/செயற்கூடங்கள் 23

  ஏ. ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல் 24

  ஒ. ஆராய்ச்சியும் வெளியீடுகளும் 25
- நிதித் தகவல் - 2011
  - அ. நிதிக் செயற்பாடு பற்றிய குறிப்பேடு 27
  - ஆ. நிதி நிலைமை பற்றிய குறிப்பேடு 28
  - இ. ஒன்றிணைந்த பணவோட்டக் குறிப்பேடு 29
  - ஈ. தேசிய சொத்துக்கள் மாற்றம் பற்றிய குறிப்பேடு 31
  - உ. கணக்கீடு பற்றிய குறிப்பேடு 32-38
- கணக்காய்வாளர் நாயகத்தன் அறிக்கை
- முடிவுரை

## 1.0 கூட்டு ஆளுமை பற்றிய குறிப்பேடு

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் பெயர் | : | இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் (1999ம் ஆண்டின் 31ம் இலக்கப்பாரளுமன்ற அதிகாரச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டது) |
| நடவடிக்கைகள் தொடங்கிய திகதி | : | 15.10.1999 |
| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | : | இல.17, மலலசேகர மாவத்தை, கொழும்பு -07 |
| கணக்காய்வாளர்கள் | : | கணக்காய்வாளர் நாயகம்,<br>கணக்காய்வாளர் அலுவலகம்,<br>கொழும்பு -07 |
| வங்கியினர் | : | இலங்கை வங்கி,<br>சுகந்திர சதுக்கக்கிளை,<br>கொழும்பு -07 |
| | : | மக்கள் வங்கி,<br>யுனியன் இடக்கிளை,<br>கொழும்பு -02 |
| கடல்கடந்த கூட்டமைப்புக்கள் | : | அ) LOGOTRI<br>ஆசிய பசுபிக் உள்ளூராட்சி பயிற்சி அமைப்பு, ஆசிய பசுபிக் ஆராய்ச்சி நிறுவனங்கள்<br><br>ஆ) CITYNET<br>மனித குடியிருப்புக்களை முகாமை செய்வதற்கான உள்ளூராட்சிநிறுவனப்பிராந்தியப் பணியமைப்பு<br><br>இ) CLGF<br>பொது நலவாய உள்ளூராட்சி அமைப்பு<br><br>ஈ) KILA<br>கேரளா உள்ளூர் நிர்வாக நிறுவனம்<br><br>உ) AIILG<br>அகில இந்திய உள்ளூர் சுயநிர்வாக நிருவகம் |

உள்ளூர் அமைப்புக்கள் : அ) FSLGA

இலங்கை உள்ளூராட்சி அதிகார சபைகளின் சம்மேளனம்

ஆ) கொழும்பு பல்கலைக்கழகம்

இ) ருகுண பல்கலைக்கழகம்

ஈ) கிழக்கு பல்கலைக்கழகம்

உ) ஆசிய நிறுவனம் (ASIA FOUNDATION)

கருத்திட்ட ஒண்றிணைப்பு : அ) LGIIP உள்ளூராட்சி கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்கள்

ஆ) உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி கருத்திட்டம்

இ) கனேடிய மாநகர சபைகளினால் ஆதரவளிக்கப்பட்ட உள்ளூராட்சி சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம்

## 2.0 ஆளுகைப் பேரவை

நிறுவகத்தின் ஆளுகைப் பேரவை, எட்டு பதவி வழி உறுப்பினர்கள், ஐந்து நியமன உறுப்பினர்கள் உட்பட பதின்மூன்று உறுப்பினர்களைக் கொண்டது.

### 2.1 பதவி வழி உறுப்பினர்களும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களும் பின்வருமாறு அமைந்திருக்கிறது.

அ. கலாநிதி நிஹல் ஜெயதிலக – தவிசாளர்
செயலாளர், உள்ளூராட்சி மற்றும்
மாகாண சபைகள் அமைச்சு.
இல.330, யூனியன் இடம், கொழும்பு–02.

ஆ. பீ.பீ.அபேகூன் அவர்கள் – உறுப்பினர்
செயலாளர், பொதுநிர்வாக,உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுகந்திர சதுக்கம், கொழும்பு–07.

இ. விமல் ரூபசிங்ஹ அவர்கள் – உறுப்பினர்
செயலாளர், கலை கலாச்சார அமைச்சு,
செத்சிரிபாய, பத்தரமுல்லை.

ஈ. எஸ்.எம்.ஜீ.ஜயரத்ன அவர்கள் – உறுப்பினர்
செயலாளர், நிர்மாண பொறியியல் சேவைகள் வீடமைப்பு
மற்றும் பொது வசதிகள்.
செத்ரிபாய, பத்தரமுல்லை.

உ. கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க – உறுப்பினர்
செயலாளர், சுற்றாடல் அமைச்சு,
இல.82, ரஜமல்வத்த வீதி,
சம்பத்பாய,
பத்தரமுல்லை.

ஊ. திரு.எ.கே.செனிவிரத்ன அவர்கள் – உறுப்பினர்
மேலதிக பணிப்பாளர் நாயகம்,
தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் நிதி
மற்றும் திட்டமிடல் அமைச்சு,
செயலகம், கொழும்பு–01

எ. பேராசியர்(திருமதி)ஏ.எஸ்.பீ.அபயரத்ன – உறுப்பினர்
கலைப்பீடாதிபதி பேராதனைப் பல்கலைக்கழகம்

ஏ. டாக்டர். எம்.ஏ.அப்துப் ரகீஸ்து – உறுப்பினர்
துறைமுகச்சுகாதார அலுவலகம், MRI
பழைய கட்டிடம், பேஸ்லயின் வீதி,
கொழும்பு–07

ஒ. பொறியியலாளர் எம்.எஸ்.நஸீர் – உறுப்பினர்
கௌரவ உள்ளூராட்சி, மாகாண
சபைகள் அமைச்சின் இணைப்புச் செயலாளர்,
இல.330 யூனியன் பிளேஸ், கொழும்பு–02

ஓ. ஜனப்.எம்.எச்.ஏ.ஸமத் – உறுப்பினர்
பிரத்தியேகச் செயலாளர்,
கௌரவ உள்ளூராட்சி மாகாண
சபைகள் அமைச்சு
இல.330 யூனியன் பிளேஸ், கொழும்பு–02

ஔ. ஜனாப்.ஐ.ஏ.ஹமீத்
பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் – உறுப்பினர்
இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம். கூட்ட அழைப்பாளர்
இல.17, மல்சேகர மாவத்தை,
கொழும்பு–07.

**2.1 சபைச் செயலாளர்**
திருமதி.நிரஞ்சலா பெரேரா

## <u>3.0 கணக்காய்வு மற்றும் முகாமைக் குழு</u>

2011ம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுவில் பின்வரும் உறுப்பினர்கள் பணியாற்றியுள்ளனர்.

அ. திரு.ஏ.கே.செனிவிரத்ன – தலைவர்
மேலதிக பணிப்பாளர் நாயகம்
தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்.

ஆ. பொறியிலாளர் எம்.எஸ்.நஸீர் – உறுப்பினர்
கௌரவ அமைச்சரின் இணைப்புச் செயலாளர்.

இ. ஜனப் எம்.எஸ்.சமத் – உறுப்பினர்
கௌரவ அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர்.

ஈ. திரு.எம்.எச்.எ.வீஜேசிறி – கூட்ட அழைப்பாளர்
SLILG யின் உள்ளகக் கணக்காய்வாளர்.

**வெளிப் பார்வையாளர்கள்**

உ. திரு.டீ.எல்.பீ.டயல் – பார்வையாளர்
உதவிக் கணக்காய்வாளர் நாயகம்

ஊ. திரு.கே.எஸ்.தயாரத்ன – பார்வையாளர்
கணக்காய்வு மேற்பார்வையாளர்

கணக்காய்வாளர் முகாமைக்குழுவின் செயலாளர்: SLILG யின் சபைச் செயலாளர் கணக்காய்வு முகாமைக் குழுவின் செயலாளராகவும் பணியாற்றுகின்றார்.

## 4.0 ஆணையை மீளாய்வு செய்து மீள் நோக்குதலும் மாகாண சபைகளதும் உள்ளூர் நிறுவனங்களதும் ஆற்றல்களை மேம்படுத்தலும்

நாட்டில் உள்ளூராட்சிக்காக ஒரு அபிவிருத்தித் தூர நோக்கைத் தேடும் பின்னணியில் இலங்கை உள்ளூராட்சி நிறுவனம் பிறந்தது. இதன் பிரகாரம் தூர நோக்கு பற்றிக் கற்று விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு 1997ல் ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஜனாதிபதி ஆணைக்குழு தனது விதந்துரைகளில், நாட்டின் உள்ளூராட்சித் துறையில் ஆற்றல்களைக் கட்டியெழுப்பும் தேவைப்பாடுகளை நிறைவேற்றக்கூடிய ஒரு புதிய நிறுவனத்தின் தேவைகளைப் பற்றிக் கடுமையாக வலியுறுத்தியது. இங்கு வலியுறுத்தப்பட்ட விடயம் உள்ளூராட்சியை ஒரு தன்னாட்சியும், சுகந்திரமும் கொண்ட, மக்களின் எதிர்பார்ப்புக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்ட ஒரு துறையாகவும், அவர்களது வாழ்க்கை நிலைமைகளை விருத்தியாக்கக் கூடிய ஒன்றாகவும் கருதுவதாகும். இம்முயற்சிகளின் உள்ளார்ந்த தன்மையாவது மக்களது செயற்பாடுகள் அவர்களது உண்மையான தேவைகளை உட்படுத்துவது மூலம், அபிவிருத்திப் பணிகளைக் கவனிப்பதற்கு உள்ளூராட்சி மன்றுகள் மிகப் பொருத்தமான நிறுவனங்கள் என்பதாகும். இங்கு முக்கியமாக வலியுறுத்தும் காரணமானது, உள்ளூராட்சி மன்றங்கள், மக்களுக்கு மிக நெருங்கிய வகையில், அடிமட்டத்திலுள்ள, மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயக அமைப்பு என்பதாகும். இவ் எதிர்பார்ப்புகளின் தொடர்ச்சியாக 1999ம் ஆண்டின் **31ம்** இலக்கப் பாராளுமன்றச் சட்டம் மூலம் SLILG தாபிக்கப்பட்டதுடன். அவ்வாண்டு ஒக்டோபர் மாதத்தில் செயற்படத் தொடங்கியது.

இலங்கை அரசியலமைப்பின் 13ம் திருத்தத்தின் கீழ் 1987ம் ஆண்டில் மூன்று படித்தரங்கள்கொண்ட ஆட்சி (Three Tiers) நாட்டில் உருவாக்கப்பட்டது. ஏனெனில் ஜனநாயகம் செயற்பாடான முறையில் இயங்க வேண்டுமெனின் பகிர்ந்தளிக்கப்பட்ட ஓரளவான அதிகாரப் பரவலாக்கம் தேவையென உணரப்பட்டது. எவ்வாறெனினும் முன்னர் இருந்த இரு படித்தரங்கள்கொண்ட முறையின் (Two Tiers) கீழும், உள்ளூராட்சி மன்றங்கள் பாரம்பரிய ரீதியில் 125 ஆண்டுகளுக்கு மேலாக ஓரளவான அதிகாரப் பன்முகப்படுலைக் கொண்டிருந்தன. எனினும் இந்நிறுவனங்களின் தாபன மற்றும் முகாமைத்திருத்திறன்கள் போதுமான அளவு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

SLILG தாபிக்கப்பட்ட அடிப்படை நோக்கம் இவ்விடயத்தை அணுகுவதற்கும், மாகாண சபைகளினதும் உள்ளூராட்சி மன்றங்களதும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களது மனங்களில் நல்லாட்சி பற்றிய கருத்தை ஊன்ற வைப்பதற் குமாகும். SLILG ஆனது இந்நோக்கங்களுக்கேற்பச் செயற்பட்டுள்ளது எனக் கூற முடியும்.

SLILG இயங்கத் தொடங்கி பதினொரு ஆண்டுகளாகின்றன. இக்காலத்துக்குள் ஒவ்வொரு ஆண்டிலும், வருடாந்த செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், ஒழுங்காக நிறைவேற்றப்பட்டுள்ளன. இத் திட்டங்கள், SLILG ஆளுகைப் பேரவையின் வழிகாட்டுதலின் கீழ் அதற்கு வழங்கப்பட்ட ஆணையின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டுள்ளன. சர்வதேச உள்ளூராட்சிப் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தேசிய நிறுவனங்கள், இந்நிறுவனத்தின் தொடக்க காலத்தில் தாக்கத்தைச் செலுத்தியுள்ளன. SLILG யின் பங்களிப்புகளின் வேகம் அதிகரித்த விதத்தில் பேணப்படுகின்றது. SLILG இன் பணியாளர்கள் விஷேடமாகப் பல்வேறு பிரிவுகளின் ஆலோசனையாளர்கள் தமது தொடக்கச் செயல்கள் மூலம் இவ்வெய்தல்களைப் பெரிதும் சாத்தியப்படுத்தியுள்ளனர்.

எவ்வாறெனினும், உள்ளூராட்சி மன்றங்கள் அடிப்படை விடயங்களில் இன்னும் குறைபாடு கொண்டனவாகவே உள்ளன.

- அவற்றின் செயற்திறனும், செயற்பாட்டுத் தன்மையும், நியாயமான அளவில் வளங்கள் சமூகத்தினரின் எல்லாப் பிரிவினருக்கும் ஒதுக்கப்படுவதும் முன்னுரிமைப் படுத்தப்படவேண்டிய தேவைகளாகும்.

- கொள்கைகள் வகுப்பதில் பதிலளிக்கும் பொறுப்பை விரிவு படுத்தக் கூடிய விதத்தில் எல்லாக் குழுக்களினதும் தேவைகளை அடையாளங்கண்டு கொள்வதில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.
- வறுமையொழிப்பிலும், தொடர்ச்சியான அபிவிருத்தியிலும் அவற்றின் செயற்பாட்டுத் தன்மை கூட்டப்படல் வேண்டும்.
- மக்களது நல்வாழ்வைப் பாதிக்கக்கூடிய தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறையில் அடிமட்டத்து மக்களை எவ்வாறு சேர்த்துக் கொள்வது என்பது பற்றிய அவர்களது கரிசனை அதிகரிக்கப்படல் வேண்டும்.

- எனவே ஒவ்வொரு ஆண்டிலும், உள்ளூராட்சி மன்றங்களை அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டிய, அதிகமான மக்களினால் அக்கறை செலுத்தப்பட வேண்டிய நிறுவனங்களாகப் பார்ப்பது எமது நோக்கமாகும். இது இறுதிப் பயன்பாட்டாளர்களான மக்களின் ஒத்துழைப்புடன், பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் காத்திரமான பங்கேற்பு தொடர்பானது. இதனால், மக்களின் தேவைகளை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகளில் இம் மன்றங்கள் தமது திறமைகளை விருத்தி செய்தல் அவசியமானதாகும்.

## 4.1 ஆணை

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று பின்வரும் பணிகளைப் புரிவதற்கான ஒரு பொதுத்துறை முகவராகச் செயற்படுவதற்கு இந் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது.

- மாகாண சபைகளினதும் உள்ளூராட்சி மன்றங்களினதும் உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை பயிற்றுவித்தலுடன், நல்லாட்சியை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கில், மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்களின் அலுவலர்கள் மற்றும் பதவியாளர்களைக் திறமை வாய்ந்தவர்களாகக் கட்டியெழுப்புவதற்கு உதவுதல்.
- மாகாண சபைகளுக்கும், உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தமது நிறுவன முறைகள் மற்றும் முகாமை ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்வதற்கு விஷேட நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- மாகாண உள்ளூராட்சி முறைகளின் நிறுவன முகாமை முறைகள் மற்றும் நடைமுறைகளை விமர்சன ரீதியில் மதிப்பிடுவதற்கு ஒரு கூட்டு அமைப்பு ஏற்படுத்தியளிப்பது.
- மாகாண முகாமை அபிவிருத்தி மற்றும் பயிற்சி அலகுகளுக்கு முகாமை அபிவிருத்தியில் உதவுதல்.
- உள்ளூராட்சியில் தேசிய கொள்கைகளை வகுப்பதில் அமைச்சருக்குத் தேவையான தரவுகளையும் தகவல்களையும் வழங்குதல்.
- மாகாண மற்றும் உள்ளூராட்சி பற்றிய புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் பிரசுரித்தல், உள்ளூராட்சி மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் தகவல்களைப் பரவச் செய்தல், மாநாடுகளை நடாத்துதல், கருத்தருங்குகளை நடத்துதல் என்பன SLILGயின் முக்கியமானபணிகளின் பிரதான பாகங்களாகும். நிதியின்மை மட்டுமே ஒரு தடையாகும். 2011ம் ஆண்டில் SLILG சர்வதேச நிறுவனங்களான LOGOTRI மற்றும் CITYNET என்பனவற்றோடு தன்னை இணைத்துக் கொண்டது.

## 4.2 நோக்கு

''பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகள் ஊடாக, உள்ளூராட்சி மூலம் ஆக உயர்ந்த தேசிய முகவர் நிலையமாகி மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதை நோக்காகக் கொண்டது''

## 4.3 பணி

மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு கவனிப்பு, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவையூடாக அத்தகைய உபதேசிய (பிராந்திய அல்லது மாகாண) மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆற்றல்களை கட்டியெழுப்பவதற்கான உள்ளூராட்சித் துறையில் பிரபலமான தேசிய முகவராக ஆகுதல்.

### 4.4 நோக்கங்கள்

மேற்கூறப்பட்ட பணி பின்வரும் நோக்கங்களுக்கு இட்டுச் செல்லும்:

i. மாகாண முகாமை அபிவிருத்திப் பயிற்சி அலகுகளுடன் பங்காளியாக இணைந்து உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆற்றல்களைக் கட்டியெழுப்புவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்து வழங்குதல்.

ii. மாகாண சபைகளினதும், உள்ளூராட்சி நிறுவனங்களினதும் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காகப் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை மேம்படுத்துவதற்கு மாகாண முகாமை அபிவிருத்திப் பயிற்சி அலகுகளை ஆதரித்தல்.

iii. உள்ளூராட்சியில் தொடர்பானவர்களுக்குத் தொழில்நுட்ப மற்றும் தகவல் சேவைகளை வழங்குவது மூலம் ஒரு மூலவள நிலையமாகச் செயற்படுதல்.

iv. பொருத்தமான தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து உள்ளூராட்சியின் மையத்தளமாக செயற்படுதல்.

v. மனித வள அபிவிருத்தி, முகாமை முறைகளை விருத்தி செய்தல், உடன்பாடான மனப்பாங்கைக் கட்டடியெழுப்புதல் மற்றும் நிறுவன மாற்றங்களை வசதிப்படுத்துதல் என்பனவற்றுக்காக விஷேட உதவிச் சேவைகளை வழங்குதல்.

vi. உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆற்றல் மேம்படுத்துதலை உறுதிப்படுத்துவதற்காக பரிந்துரைத்தல், பயிற்சியளித்தல், ஆலோசனை மற்றும் ஆராய்ச்சி சேவைகளை வழங்குவதன் பொருட்டு SLILG யின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கு ஏற்பாடு செய்தல்.

### 4.5 SLILG யின் ஆலோசனைச் சேவைகள் மற்றும் உசாவுதல் சேவைகள்

SLILG, உசாவுதல் மற்றும் ஆலோசனைச் சேவைகளுக்காகப் பின்வரும் ஏழு(7) பிரதான பிரிவுகளைத் தாபித்துள்ளது.

அ) மனித வளங்கள் அபிவருத்தி
ஆ) பொறியியல்
இ) பொது முகாமை
ஈ) பௌதிக திட்டமிடுதல்
உ) நிதி முகாமை
ஊ) ஆராய்ச்சியும், வெளியீடும்
எ) சட்ட விடயங்கள்

## 4.6 நோக்கு எல்லைக் குழுவினர் (Target Group)

பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகளினது பயன் சென்றடையும் மொத்த நோக்கு எல்லைக் குழு பின்வருமாறு : ஒன்பது மாகாண சபைகள், முன்னூற்று முப்பது உள்ளூராட்சி மன்றங்கள். இவற்றில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் 418 பேர் மாகாண சபைகளிலும், நான்காயிரத்து முன்னூற்று தொண்ணுற்றி ஒரு (4391) பேர் உள்ளூராட்சி மன்றங்களிலும் உள்ளனர். ஊழியர்களைப்பொறுத்தமட்டில் உள்ளூராட்சி மன்றுகளில் மாத்திரம் எமது சேவைகளால் பயன்பெறக்கூடியவர்களின் மொத்த எண்ணிக்கை செயலாளர்கள். களப்பணியாளர்கள் மற்றும் தொழிலாளர் வகுப்பினர் என்ற வகையில் சுமார் 50,000 பேர் உள்ளனர்.

மாகாண சபைகளிலும், உள்ளூராட்சி மன்றுகளிலும் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள பல்வேறு பிரிவினர்கள் உள்ளனர். பயிற்சித் தேவைகளில் ஒவ்வொரு பிரிவினரும் அடுத்த பிரிவினரிலிருந்து வேறுபடுகின்றனர். எனவே MDTU க்களுடன் கலந்துரையாடியதன் மூலம் அடையாளங் காணப்பட்ட தேவைகளுக்கேற்ப நிகழ்ச்சித்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

SLILG யானது MDTU களுடன் அவைகளது பயிற்சித்திட்டங்களை வடிவமைப்பதிலும் அவற்றின் பயிற்சித் திட்டங்களைக் குறைநிரப்புவதிலும் காத்திரமான உதவியைப் புரிந்துள்ளது. 2011ம் ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட புதிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக, 2010ம் ஆண்டிலிருந்து முன்னெடுத்துச் செல்லப்பட்ட செயற்றிட்டங்கள், SLILG யின் 2011ம் ஆண்டின் பயிற்சி முகாமை மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளின் அளவை அதிகரித்தன..

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்பட்ட LGIIP கருத்திட்டம்,2010ம் ஆண்டிலிருந்து முன் கொண்டுவரப்பட்டது. உலக வங்கியினால் நிதி வழங்கப்பட்ட கிராமிய வீதி அகலமாக்கல் கருத்திட்டமும் இவ்வாறே செய்யப்பட்டது.

கொழும்பில் நடாத்தப்பட்ட உள்ளூராட்சி உயர் டிப்ளோமா, 2010ல் பதுளையில் தொடங்கப்பட்ட முகாமை டிப்ளோமா என்பனவும் 2011ல் தொடரப்பட்டன.

இவ்வாறே, உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து அறுபது பங்கேற்பாளர்களைக் கொண்டு சமகாலத்தில் மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் 2010 நவம்பர் மாதத்தில் தமிழ் மொழியில் தொடங்கப்பட்ட உள்ளூராட்சி டிப்ளோமா பாடநெறி 2011லும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

2010ல் தொடங்கப்பட்டிருந்த ‘‘மக்கள் தொகைப் பெருக்கம் உள்ளூராட்சியில் ஏற்படுத்தும் விளைவு’’ பற்றிய ஆராய்ச்சி 2011லும் தொடரப்பட்டது.

## 4.7 கூட்டிணைப்பும் மேற்பார்வையும்

SLILGயின் ஏழு வித்தியாசமான பிரிவுகளினால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகள் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் தொடர்ச்சியாக

மேற்பார்வை செய்யப்பட்டதுடன் இக்கூட்டங்கள் இந்நோக்கத்துக்காக SLILGயில் SLILGயின் பணிப்பாளரின் தலைமையில் நடைபெற்றன.

இவ்வாறே SLILGயின் நிதியொதுக்கிட்டின் கீழ் நிறைவேற்றப்பட்ட பயிற்சி நடவடிக்கைகளை கூட்டிணைத்தலும் மேற்பார்வை செய்தலும் MDTU க்களினாலும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்களாலும் நிறைவேற்றப்பட்டன. இவை SLILG யின் பயிற்சிப் பணிகளின் ஒரு முக்கியமான பாகமாகக் கருதப்படுவதுடன் SLILG யில் MDTU மற்றும் PCLG யின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற முன்னேற்றக் கூட்டங்களில் காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டன.

## 4.9 வர்த்தக மேம்பாடு

*உள்ளூராட்சித் துறையுடன் தொடர்பான பல்வேறு அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு கருத்திட்ட அமுலாக்கங்களுக்காக SLILG யின் ஒத்துழைப்பை நாடுவதாகக் கடந்த கால அனுபவங்கள் காண்பிக்கின்றன.*

இந்நடவடிக்கைகளின்போது, அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்ற வகையில் உரிய முறையில் மிகவும் பொருத்தமான பெறுபேறுகளை நோக்காகக் கொண்ட கருத்திட்டங்களை அடையாளங் கண்டு தெரிய வேண்டியிருந்தது. இவ்வர்த்தக மேம்பாட்டுச் செயற்பாடு SLILG யின் பணிப்பாளரின் பணிப்பின் கீழ் நடைபெற்றன. SLILG யின் ஆட்சிப் பேரவையின் அங்கீகாரத்துடன் அத்தகைய நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தி பொருத்தமான திட்டங்கள் அமுல்நடத்துதலுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

## 4.10 தேசிய, சர்வதேச பயிற்சி மற்றும் கல்வி நிறுவனங்களுடன் தொடர்புகள்

இலங்கை உள்ளூராட்சி நிறுவகம் தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டுள்ளது. இத்தொடர்புகள் இரு தரப்பினர்களதும் பரஸ்பர நலன்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு தாபிக்கப்பட்ட தொடர்புகள் விசேடமாக CITY NET மற்றும் LOGOTRI யின் அனுசரனையின் கீழ் வழங்கப்பட்ட புலமைப் பரிசில்களின் கீழ் நாட்டுக்கு வெளியே பயிற்சி மற்றும் ஆராய்ச்சியின் கீழ் வழங்கப்பட்ட வாய்ப்புக்கள் மூலம் மேலும் விரிவுபடுத்தப்பட்டன. LOGOTRI, JICA, CITYNET, USAID மற்றும் UN-HABITAT என்பனவற்றுடன் செய்து கொள்ளப்பட்ட தகவல் பரிமாற்றம் இந்நிறுவனத்தின் செயற்பாடுகளின் முன்னேற்றத்துக்காக 2011ம் ஆண்டில் பெரிதும் பயனளித்துள்ளன.

SLILG யானது இத்தொடர்புகளை எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் உறுதிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது.

தேசிய மட்ட நிறுவனங்களுடான தொடர்புகளை பொறுத்தவரை, இவ்வாண்டிலும் உள்ளூராட்சி மன்றுகளுக்கு SLILG மூலம் வழங்கப்பட்ட சேவைகள் பற்றிய பின் அறிக்கை பேணப்பட்டு வந்தது. இதன் வாயிலாக எமது செயற்கூடங்களைக்

குறிப்பிடத்தக்க அளவுக்கு மீள அமைப்பதற்கும் உள்ளூராட்சித்துறைக்கு மேலும் சேவையாற்றுவதற்கும் புதுச் செயற்கூடங்களை அமைப்பதற்கும் பெரிதும் உதவியுள்ளது.

ஆசிய நிறுவனத்துடனான (ASIA FOUNDATION) எமது தொடர்புகள் உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பெரிதும் பெறுமதியானதாக இருந்துள்ளன. உள்ளூராட்சிக்கு அவசியம் தேவையான துணைச் சட்டங்களை உண்டாக்குதல் நீண்ட காலமாக உள்ளூராட்சி மன்றங்களினால் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. உள்ளூராட்சி அமைச்சினாலும், மாகாண சபைகளினாலும் விதந்துரைக்கப்பட்ட தரமான துணைச் சட்டங்களை ஏற்பதில் அவை திருப்தி கொண்டிருந்தன. தமது குறிப்பிட்ட தேவைகளுக்காக உள்ளூராட்சி மன்றங்கள் துணைச் சட்டங்களை ஆக்கிய சந்தர்ப்பங்கள் அரிதாகவே இருந்தன. இதற்கான பிரதான காரணம் உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் துணைச் சட்டங்களை உருவாக்குவதில் போதிய திறனுள்ளவர்கள் இல்லாமையே.

உள்ளூராட்சி மன்றங்கள் தமக்கு விசேடமாகத் தேவைப்பட்ட துணைச்சட்டங்களை ஆக்குவதற்கு வலுவூட்டும் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொள்வதற்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு, ஆசிய நிறுவனம் மற்றும் SLILG என்பன ஒருங்கிணைந்து 2011ம் ஆண்டு செயற்பட்டன.

ஆசிய நிறுவனத்தினால் நிதியளிக்கப்பட்டு மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஒரு பிரதான வேலைத்திட்டம் தொடங்கப்பட்டதுடன் அது மிகவும் வெற்றிகரமானதாக அமைந்தது. இத்திட்டம் ஏனைய மாகாணங்களிலும் பின்னர் பின்பற்றப்பட்டது.

## 4.11 **SLILG யின் முகாமைத்துவ அமைப்பு**

இந் நிறுவனத்தின் செயற்பாடு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான கொள்கைத் தீர்மானங்கள், வழிகாட்டல்கள் என்பன ஆளுகைப் பேரவையினால் மேற்கொள்ப்படுகின்றன. இந் நிறுவனத்தின் ஆளுகைப் பேரவை குறிப்பிடப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் உயர் தொழில் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் கொண்டது. 1999ம் ஆண்டின் 31ம் இலக்க இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஆளுகைப் பேரவையின் தலைவர் உள்ளூராட்சிவிடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளராவார். இதன் பிரகாரம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி நிஹால் ஜயதிலக அவர்கள் 2011ம் ஆண்டில் ஆளுகைப் பேரவையின் தலைவராகப் பணியாற்றினார்.

SLILG யின் பணிப்பாளர் இந்நிறுவனத்தின் பிரதான நிர்வாகியாவார். இவர் ஆளுகைப் பேரவையின் ஒரு உறுப்பினராகவும் உள்ளார். இவருக்கு உதவியாக ஒரு மேலதிக பணிப்பாளர், ஒரு ஆலோசனைக் குழு, பிரதிப் பணிப்பாளர்கள், கணக்காளர் மற்றும் உதவுப் பதவியாளர்களும் உள்ளனர்.

இப்போது SLILG யில் ஒன்பது பிரிவுகள் உள்ளன. அவையாவன மனித வளங்கள் அபிவிருத்தி, பொறியியல், பொது முகாமை, பௌதீக வளங்கள் திட்டமிடுதல்,

நிதிமுகாமை, சட்டம், ஆராய்ச்சியும் வெளியீடுகளும், நிருவாகம் மற்றும் கணக்கீடு என்பனவாகும்.

SLILG யானது உள்ளூராட்சி விடயத்தில் உசாத்துணை விடயங்கள், ஆராய்ச்சி ஆவணங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய ஒரு நூலகத்தையும் கொண்டது. நிதி வளங்கள் பற்றாக்குறை காரணமாக 2011ல் மேலதிகமாகப் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்படவில்லை. எவ்வாறெனினும் பல்வேறு பயிற்சிப் புத்தகங்கள் சிங்கள, தமிழ் மொழிகளில் SLILG யினால் தயாரிக்கப்பட்டு, உள்ளூராட்சி மன்றுகளின் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பயிற்சிக்காக பயன்படுத்தப்பட்டு, அவற்றின் பிரதிகள் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

4.12 உள்ளூராட்சி மன்றுகளின் பதவியாளர்களின் இடம்பெயர்வு

உள்ளூராட்சிச் சேவை ஒழிக்கப்பட்டு மாகாணப் பகிரங்க சேவையுடன் ஒன்று சேர்க்கப்பட்டதன் விளைவாக, நன்கு பயிற்றப்பட்ட அனுபவம் மிக்க பதவியாளர்கள் உள்ளூராட்சித் துறையிலிருந்து பெருமளவில் இடமாற்றம் பெற்று மாகாண சபைகளின் ஏனைய திணைக்களங்களில் சேவையாற்றுகின்றனர். இது உள்ளூராட்சி முறையின் செயற்பாட்டைப் பாதித்துள்ளது.

உள்ளூராட்சி அலுவலர்கள், SLILG யினால் பெரும் பிரயாசைக்கு உட்பட்டு பின்வரும் அம்சங்களில் பயிற்றப்படுகின்றனர் : ஆதனங்களை மதிப்பிடுதல், படங்களைத் தயாரிப்பதற்கான GPS/GRS முறைகள், உள்ளூராட்சி நிறுவனமொன்றின் ஆண்டு வரவு செலவுத்திட்டம் மற்றும் இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல், உள்ளூர் ஆளுகைக்குத் தேவையான துணைச்சட்டங்களை வரைதல் போன்றன. பணியாட்களின் இத்தகை இடமாற்றம் காரணமாக உள்ளூராட்சிச் சேவையின் தரத்திலும் அளவிலும் குறைவு ஏற்பட்டுள்ளது. இதனால் உள்ளூராட்சித்துறை பல்லாண்டு காலமாகப்பெற்றிருந்த அனுபவ மிக்க நிபுணத்துவத்தை இழந்துள்ளது. அத்தோடு, வேறு திணைக்களங்களிலிருந்து வரும் புதிய பதவியாளர்களை உள்ளூராட்சி ஆளுகை தொடர்பாகப் பயிற்றுவிக்குமாறு SLILG யிடம் வேண்டுகோளும் விடப்படுகின்றது. இது ஆண்டுதோறும் நடைபெறும் ஒரு விடயமாகும். இதற்கு 2011ம் ஆண்டு விதிவிலக்கல்ல.

**இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆலோசனை :** உள்ளூராட்சிச் சேவை மீள ஸ்தாபிக்கப்டுதல் வேண்டும். ஆன்றேல் ஒரு நடுத்தரமான திருத்த நடவடிக்கையாக, உள்ளூராட்சித் துறையில் ஒரு மாகாண சபை அலுவலர் குறைந்தளவு பத்து ஆண்டுகளாவது கடமைபுரிய வேண்டுமென விதிக்கப்படுதல் வேண்டும்.

இந்த ஏற்பாட்டினால் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிபுணத்துவ ஆற்றல் நிலைத்து நிற்பதோடு அவற்றின் பயிற்சித் தேவைகளும் கணிசமான அளவு குறைந்து விடும் என்பது எமது அபிப்பிராயமாகும்.

## 5.0 2011ம் ஆண்டு நிறுவனத்தின் பதவியணி நிலை

ஒவ்வொரு பிரிவிலும், வித்தியாசமான செயற்பாடுகளுகளை நிறைவேற்றுவதற்காகப் பதவியாளர்கள் நியமனம் திட்டமிடப்பட்டுள்ளது.

2011ல் பதவியணி நிலை பின்வருமாறு.

**2011ல் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிலை**

| பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | | | உண்மையான பதவி நிலை | | |
|---|---|---|---|---|---|---|
| | நிறைவேற்றுனர் | நிறைவேற்றுனர் அல்லாதோர் | மொத்தம் | நிறைவேற்றுனர் | நிறைவேற்றுனர் அல்லாதோர் | மொத்தம் |
| நிருவாகமும் செயலாளர் பிரிவும் | 01 | 21 | 22 | 02 | 20 | 22 |
| மனித வள அபிவிருத்தி பிரிவு | 01 | 01 | 02 | 01 | 01 | 02 |
| பொறியியல் பிரிவு | 01 | 01 | 02 | 01 | 01 | 02 |
| பொது முகாமைப் பிரிவு | 01 | 01 | 02 | 01 | 01 | 02 |
| பௌதீக திட்டமிடற்பிரிவு | 01 | 01 | 02 | 01 | 01 | 02 |
| நிதி முகாமைப் பிரிவு | 01 | 01 | 02 | - | 01 | 01 |
| சட்டப்பிரிவு | 01 | 01 | 02 | 01 | 01 | 02 |
| ஆராய்ச்சிப் பிரிவு | 01 | 02 | 03 | 01 | 02 | 03 |
| பயிற்சிப் பிரிவு | 01 | 01 | 02 | 01 | 01 | 02 |
| நிதிப்பிரிவு | 01 | 03 | 04 | 01 | 03 | 04 |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | - | 01 | 01 | - | 01 | 01 |
| **மொத்தம்** | **10** | **34** | **44** | **10** | **33** | **43** |

SLILG யின் பதவியாளர்கள் தொகை வளர்ந்து வரும் தேவை மற்றும் மாகாண சபையிலிருந்தும் உள்ளூராட்சி மன்றங்களிலிருந்தும் வரும் அதிகரித்த கோரிக்கைகள் என்பனவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

## 6.0 SLILG யின் 2011ம் ஆண்டிலான செயற்பாடுகள் ஒரே பார்வையில்

01.01.2011 தொடக்கம் 31.12.2011 வரை

| | விபரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட நிதி | மொத்த செலவினம் | அங்கீகரிக்கப்பட்ட நிதிப்பான்பாட்டு % | முடிக்கப்பட்ட செயற்கூடங்களின் எண்ணிக்கை | முடிக்கப்பட்ட செயற்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 01 | **தேசிய மட்டப் பயிற்சித் திட்டங்கள்** | 10,000,000.00 | 10,368,470.28 | 104% | 288 | 05 |
| | மனித வள அபிவிருத்திப் பிரிவு | 1,500,000.00 | 1,982,069.61 | 132% | 36 | 03 |
| | பொறியியல் பிரிவு | 1,000,000.00 | 307,266.13 | 31% | 08 | 01 |
| | பொது முகாமைப் பிரிவு | 1,500,000.00 | 1,565,051.59 | 104% | 30 | - |
| | பௌதீக திட்டப்பிரிவு | 1,500,000.00 | 1,315,017.18 | 88% | 35 | - |
| | நிதிப் பிரிவு | 1,500,000.00 | 1,664,602.75 | 111% | 64 | - |
| | சட்டப்பிரிவு | 1,500,000.00 | 1,633,081.80 | 109% | 36 | 01 |
| | கல்விப்பிரிவு | 1,500,000.00 | 1,901,381.22 | 127% | 88 | |
| 02 | **மாகாண மட்ட பயிற்சித்திட்டம்** | **1,000,000.00** | **911,296.07** | **91%** | **36** | **-** |
| 03 | **SLILGயின் ஆற்றல் கட்டியெழுப்புதல்** | **2,000,000.00** | **1,677,116.45** | **84%** | **-** | **08** |
| 04 | **ஆராய்ச்சி, நூல் நிலையம், வெளியீடுகள்** | **2,000,000.00** | **1,974,292.26** | **99%** | **49** | **03** |
| 05 | **கணனிச் சான்றிதழ் பாடநெறி** | **-** | **378,009.00** | **-** | **28** | **-** |
| | **மொத்தம்** | **15,000,000.00** | **15,309,184.06** | **102%** | **410** | **16** |

**குறிப்பு:-**

2011ம் ஆண்டின் பயிற்சித் திட்டங்களுக்காகத் திட்டமிடப்பட்டிருந்த ரூபா 15,000,000ஐ விட ரூபா 309,184.06 சதம் மேலதிகமாகச் செலவிடப்பட்டிருந்தது. பயிற்சிச் செயற்கூடங்கள் மற்றும் பயிற்சி நெறிகளுக்கான மேலதிக தேவையை SLILG நிறைவேற்ற வேண்டியிருந்தது. சில டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாட நெறிகளில் பங்குபற்றிய வர்களிடமிருந்து ஒரு சிறு தொகையை அறவிடுவதன் மூலம் மேலதிக தொகை பெறப்பட்டிருந்தது. ஐந்து நாட்கள் வரையான காலப்பகுதிக்குரிய பயிற்சிச் செயற்கூடங்களிலிருந்து கட்டணங்கள் அறவிடப்படவில்லை.

## 7.0 செயற்பாடுகளின் விபரங்கள்

### 7.1 மனித வளங்கள் அபிவிருத்தி பிரிவு

உள்ளூர் அதிகார சபை அலுவலர்கள், மாகாணசபைகளின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரின் மனிதவள அபிவிருத்திக்கு முழுமையான பொறுப்புடையதாக SLILG யின் மனித வள அபிவிருத்திப் பிரிவு செயற்படுகிறது. உள்ளூராட்சி மன்றுகளின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான பயிற்சிச் செயற் கூடங்கள் 2010ம் ஆண்டின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் பின்னர் மிக முக்கியமானதாகவும் காலத்துக்குத் தேவையானவையாகவும் அமைந்திருந்தன. இதற்கு மேலதிகமாக உள்ளூராட்சி மன்றங்களில் பட்டதாரிகள் உட்பட பல புதிதாகச் தெரிவு செய்யப்பட்டவர்கள் இருந்தமையினால் அவர்களைப் பயிற்றுவதற்காககவும் மனிதவளங்கள் அபிவிருத்திப் பிரிவு நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தியது.

ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பயன்படுத்தப்பட்ட நிதி (இலங்கை ரூபா 000') - 1982ரூபா

முடிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் /செயற்கூடங்கள்/செயற்பாடுகள் என்பனவற்றின் எண்ணிக்கை - 39

நிதிப்பயன்பாட்டு வீதம் - 132%

| | செயற்திட்டம் /செயற்பாடு | நாட்கள் | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|
| 01 | அறிவுறுத்தற்திட்டம் | 06 | 301,920.00 |
| 02 | முன்னேற்றமற்ற உள்ளூராட்சி மன்றுகள் தொடர்பான திறன் அபிவிருத்திப் பயிற்சித் திட்டம் | 18 | 924,242.61 |
| 03 | மாதாந்த MDTU கூட்டங்களைக் கூட்டுதல் | 03 | 82,709.00 |
| 04 | உள்ளூராட்சியில் உயர் டிப்ளோமா ADLG-2011 | - | 385,624.50 |
| 05 | கணனிப் பிரயோகத்தில் சான்றிதழ் பாடநெறி | 12 | 287,573.50 |
| | **உப மொத்தம்** | **39** | **1,982,069.61** |

## 6.2 பொறியியற் பிரிவு

SLILG யின் பொறியியற் பிரிவு உள்ளூராட்சி மன்றுகளின் தொழில்நுட்ப திணைக்களம் மாகாண சபைகளின் பொறியியற் பிரிவு என்பவற்றின் ஆற்றல்களைக் கட்டியெழுப்புவதற்கான முழுமையான பொறுப்பைக் கொண்டது. எனவே நிறுவன ரீதியிலான நோக்கங்களின் அடிப்படையில் பயிற்சி ஆலோசனை மற்றும் ஆராய்ச்சி என்பவற்றினூடாக இந்நோக்கத்தை அடைவதற்குக் திட்டமிடப்பட்டுள்ளது.

தயாரிக்கப்பட்ட பொறியியல் பயிற்சி நூல்களின் அடிப்படையில் பொறியிலாளர்கள், வேலை மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் பயிற்சியளிக்கப்படுகிறார்கள். அதற்கு மேலதிகமாகத் தொழில்நுட்ப அலுவலர்களுக்கும் மாகாண பொறியியலாளர்களுக்கும் திறன் அபிவிருத்தி மற்றும் அறிவை இற்றைப்படுத்தல் என்பனவற்றில் நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து பயன்படுத்தப்பட்ட
நிதி (இலங்கை ரூபா 000’) - ரூபா 307,266
முடிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் /செயற்கூடங்கள/செயற்பாடுகள் - 09
நிதிப்பயன்பாட்டு வீதம் - 31%

| | செயற்றிட்டம்.՛. செயற்பாடு | நாட்கள் | உண்மைச் செலவீனம் |
|---|---|---|---|
| 01 | மாகாண சபைகளில் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் | 05 | 129,971.00 |
| 02 | உள்ளூராட்சி மன்றுகளில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் மற்றும் பயிற்சித்திட்டங்கள் (சட்டம், வாகனப் பேணுகை வீதி நிர்மாணம் SWH மற்றும் சுகாதார ரீதியானவை) | 03 | 28,165.00 |
| 03 | முகாமைப் போட்டி - 2009 | - | 1,491,30.13 |
| | **உப மொத்தம்** | **08** | **307,266.13** |

குறிப்பு:

உலக வங்கியினால் நிதி வழங்கப்பட்ட கிராம வீதி அகலமாக்கும் திட்டம் SLILGயின் பொறியியற் பிரிவினால் அவசர அடிப்படையில் முடிக்கப்படுதல் வேண்டுமெனவும் நிதி வழங்கும் முகவர்களுக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமெனவும் கூறப்பட்டதனால் இப்பிரிவின் திறைசேரி நிதி வழங்கிய சில பணிகள் அடுத்த ஆண்டுக்குத் தவணை போடப்பட வேண்டியிருந்தன. அத்துடன் ஒதுக்கப்பட்டிருந்த நிதியின் எஞ்சிய பாகம். ஆளுகைப் பேரவையின் அங்கீகாரத்துடன் SLILG யின் ஏனைய பிரிவுகளுக்குத் திருப்பப்பட்டன.

### 6.3 பொது முகாமைப்பிரிவு

SLILG யின் பொதுமுகாமைப் பிரிவு, இலங்கையின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மனித வள அபிவிருத்தி தொடர்பாகப் பங்களிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்டது.

அதிகார பகிர்வு பற்றியும் ஆளுகை தொடர்பாகவும் அரசியற் தலைமைத்துவம், அலுவலர்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களிடையில் பரந்த அறிந்துகொள்தலை ஏற்படுத்துவதற்காகவும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, அவர்களது பயிற்சித் தேவைகளை மதிப்பிட்டதன் பின்னர் இந்நிறுவனங்களின் திறமையையும் செயற்தன்மையையும் மேம்படுத்துவதற்காகவும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து பயன்படுத்தப்பட்ட
நிதி(இலங்கை ரூபா 000’) - ரூபா 1,565
முடிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் /செயற்கூடங்கள் /செயற்பாடுகள் - 30
நிதிப்பயன்பாட்டு வீதம் - 104%

| | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | நாட்கள் | உண்மைச் செலவீனம் |
|---|---|---|---|
| 01 | பங்கேற்பு முகாமை | 02 | 92,695.00 |
| 02 | பொது உறவுகள் | 03 | 110,735.00 |
| 03 | திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 25 | 1,361.621.59 |
| **உப மொத்தம்** | | **30** | **1,565,051.59** |

## 6.4 பௌதீகத் திட்டப் பிரிவு

இலங்கையில் உள்ள மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றின் அலுவலர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தல், பயிற்சி, ஆலோசனை சேவைகள் ஊடாக ஆற்றல்களை கட்டியெழுப்புவதற்குப் பணியாற்றுவது இப்பிரிவின் பிரதானமான நோக்கமாகும். பௌதீகவள திட்டமிடல் துறையில் அவர்களது அறிவு, மனப்பாங்கு திறமைகள் சேவை அளவு என்பன இதனால் மேம்படுத்தப்படுகிறது. இதன் இறுதியான நோக்கம் உள்ளூராட்சி பிரிவில் வாழும் மக்களுக்குச் சிறந்த வாழ்க்கை நிலைமையினை எற்படுத்தி அளிப்பதாகும்.

ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து பயன்படுத்தப்பட்ட
நிதி(இலங்கை ரூபா 000') - ரூபா 1,315
முடிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்.'.செயற்கூடங்கள்.'.செயற்பாடுகள் - 35
நிதிப்பயன்பாட்டு வீதம் - 88%

| | நிகழ்ச்சித்திட்டம் , செயற்பாடு | நாட்கள் | உண்மைச் செலவு |
|---|---|---|---|
| 01 | பொதீக திட்ட அபிவிருத்தி | 12 | 411,923.44 |
| 02 | GIP/GIZ பயிற்சித்திட்டம் | 19 | 713,639.48 |
| 03 | இடர்முகாமை பற்றிய மற்றும் ஆளுகை தொடர்பான பயிற்சித்திட்டம் | 4 | 189,454.26 |
| | **உப மொத்தம்** | 35 | **1,315,017.18** |

## 6.5 நிதி முகாமைப் பிரிவு

நிதி முகாமைப்பிரிவின் பிரதான கவனம் பின்வருமாறும்

- உள்ளூராட்சி பதவியாளர்களின் நிதி முகாமை பற்றிய திறன்கள் அபிவிருத்தி
- தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு நிதி முகாமை பற்றி அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.
- நிதி முகாமையில் தமது திறமையை மேம்படுத்திக் கொற்வதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குதல்.
- நிதி முகாமை பற்றி பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் திட்டங்களை நடத்துதல்.

இவ் வகையில் SLILG யினால் தயாரிக்கப்பட்ட MODULESகள் உள்ளூராட்சி அமைப்பின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதில் மிகப்பயன் அளிப்பனவாக இருந்துள்ளன. நிதி முகாமை தொடர்பாகத் தெரிவு செய்யப்பட்ட துறைகளில் இன்னமும் கிராக்கி நிலவுகின்றது. உண்மையான தேவைகளின் அடிப்படையில் பயிற்சிகளை நடத்துவதற்காக பின்வரும் விடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

- நிதி அறிக்கைகளைத் தயாரித்தல்
- வரவு செலவுத் திட்டங்கள் தயாரித்தல், திட்டக் கட்டுப்பாடுகள் மற்றும் மேற்பார்வை செய்தல்
- இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் மற்றும் அவற்றின் பிரயோகங்கள் தொடர்பாக அறியச் செய்தல்
- நிதி மற்றும் காசு புரள்வு பற்றிய குறிப்பேடுகளைத் தயாரித்தல்
- இலங்கையின் கணக்காய்வு மற்றும் கணக்காய்வு தடங்கல் பற்றி அறியச் செய்தல்
- உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் பற்றி அறியச் செய்தல்
- உள்ளூராட்சி நிதி முகாமை பற்றிய டிப்ளோமா பாட நெறியை தொடர்ச்சியாக நடத்துதல்.

ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து பயன்படுத்தப்பட்ட
நிதி(இலங்கை ரூபா 000’) - ரூபா 1,664
முடிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் /செயற்கூடங்களா/செயற்பாடுகள் - 64
நிதிப்பயன்பாட்டு வீதம் - 111%

| | நிகழ்ச்சித் திட்டம் /செயற்பாடு | நாட்களின் எண்ணிக்கை | உண்மையான செலவு |
|---|---|---|---|
| 01 | உள்ளூராட்சி மன்றங்களுக்கான கணக்கீட்டுத் தகவல் முறை பற்றிய சான்றிதழ் பாடநெறி | 6 | 136,778.00 |
| 02 | 2010ம் ஆண்டுக்கான நிதிக் குறிப்பேடுகளைத் தயாரித்தலும் பின்தங்கிய உள்ளூராட்சி மன்றுகளுஞ்காகன சேவையினுள் பயிற்சித்திட்டமும் | 27 | 358,706.00 |
| 03 | உள்ளூராட்சி மன்றுகளுக்கான நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் பற்றிய செயல்ரீதியிலான பயிற்சித் திட்டம் | 31 | 1,169,118.75 |
| | | **64** | **1,664,602.75** |

**6.6 சட்டப் பிரிவு**

ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து பயன்படுத்தப்பட்ட
நிதி(இலங்கை ரூபா 000’) - ரூபா 1,633
முடிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் /செயற்கூடங்களா/செயற்பாடுகள் - 36
நிதிப்பயன்பாட்டு வீதம் - 109%

| | நிகழ்ச்சித் திட்டம் செயற்பாடு | நாட்களின் எண்ணிக்கை | உண்மையான செலவு |
|---|---|---|---|
| 01 | உள்ளூராட்சி முறையை விருத்தி செய்தல் | 14 | 574,357.55 |
| 02 | உள்ளூராட்சி மன்றங்களினால் சரியான வர்த்தமானி அறிவித்தல்களையம் விசாரித்தல்(ஏனைய அறிவித்தல்களையும்) | 10 | 470,423.00 |
| 03 | உள்ளூராட்சி மன்றுகளுக்கான நீதிமன்ற நடைமுறைகள் | 12 | 550,301.25 |
| 04 | L.D செயற்குழு உறுப்பினர்கள் | | 38,000.00 |
| | **உப மொத்தம்** | 36 | **1,633,081.80** |

### 6.7 பயிற்சிப் பிரிவு

ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து பயன்படுத்தப்பட்ட
நிதி(இலங்கை ரூபா 000’) - ரூபா 1,901
முடிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்,செயற்கூடங்கள்,செயற்பாடுகள் - 88
நிதிப்பயன்பாட்டு வீதம் - 127%

| | நிகழ்ச்சித்திட்டம் , செயற்பாடு | நாட்கள் எண்ணிக்கை | உண்மையான செலவு |
|---|---|---|---|
| 01 | உள்ளூர் ஆளுகையில் உயர் டிப்ளோமா – கொழும்பு | 44 | 922,778.47 |
| 02 | உள்ளூர் ஆளுகையில் டிப்ளோமா தமிழ் மொழி மூலம் | 44 | 948,016.25 |
| 03 | சிங்கள தமிழ் மொழிகளில் செய்தித்தாள் | | 30,586.50 |
| | உப மொத்தம் | 88 | 1,901,381.22 |

### 6.6 மாகாணப் பயிற்சித்திட்டங்கள், செயற்கூடங்கள் -2011

எல்லா மாகாண MDTUக்களும் தமது 2011ம் ஆண்டுக்கான செயற்றிட்டங்களை இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்திற்குச் சமர்ப்பித்தன. இவை தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களையும் அலுவலர்களையும் மாகாணங்களின் எல்லாப் பயிற்சி அலகுகளிலும் பயிற்றுவித்தல் எனும் மிக முக்கியமான நிகழ்ச்சித்திட்டங்களை உட்படுத்தியுள்ளதாக இருந்தன.

ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து பயன்படுத்தப்பட்ட
நிதி(இலங்கை ரூபா 000’) - ரூபா 911
முடிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்,செயற்கூடங்கள்,செயற்பாடுகள் - 36
நிதிப்பயன்பாட்டு வீதம் - 91%

| | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | நாட்கள் எண்ணிக்கை | உண்மையான செலவு |
|---|---|---|---|
| 01 | மேல் மாகாணம் | 8 | 203,927.00 |
| 02 | மத்திய மாகாணம் | 8 | 188,223.00 |
| 03 | வடமேல் மாகாணம் | 4 | 94,678.32 |
| 04 | வடமத்திய மாகாணம் | 3 | 85,270.25 |
| 05 | சப்பிரகமுவ மாகாணம் | 5 | 149,070.00 |
| 06 | ஊவா மாகாணம் | 6 | 133,515.00 |
| 07 | தென் மாகாணம் | 2 | 56,612.50 |
| | **உப மொத்தம்** | **36** | **911,296.07** |

### 6.7 SLILG யின் ஆற்றலைக் கட்டியெழுப்புதல்

ஆறரை வருடக்காலத்தினுள் பல மைல் கற்களை கடந்து வந்ததன் பின்னர் SLILG நிறுவகம், இது வரையான காலச் செயற்பாட்டைப் பின்னோக்கிப் பார்த்தது. எமது செயல்களுக்கு இன்னும் வலுவூட்டுவதற்காக, நாம் விசேட நிகழ்ச்சிகளையும் நடத்த வேண்டி இருந்தது.

ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து பயன்படுத்தப்பட்ட
நிதி(இலங்கை ரூபா 000') - ரூபா 1,677
முடிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்,செயற்கூடங்கள்.'.செயற்பாடுகள் - 08
நிதிப்பயன்பாட்டு வீதம் - 84%

| | நிகழ்ச்சித்திட்டம், செயற்பாடு | நாட்கள் எண்ணிக்கை | உண்மையான செலவு |
|---|---|---|---|
| 01 | நிறுவகத்தின் பதவியாளர்களின் ஆற்றலைக் கட்டியெழுப்புதல் (உள்நாட்டு, வெளிநாட்டு) | | 574,852.50 |
| 02 | கண்காட்சிகளை நடத்துதல், சாவதேச மற்றும் தேசிய நிகழ்ச்சித்திட்டங்களையும், செயலமர்வுகளையும் நடத்துதல் | 5 | 347,895.20 |
| 03 | வெளிநாட்டுப் பயிற்சி திட்டங்களைக் கூட்டிணைத்தல் | 1 | 59,232.75 |
| 04 | தேசிய வைபவங்களும், தொடக்க வைபவங்களும் | 1 | 695,136.00 |
| | **உப மொத்தம்** | **7** | **1,677,116.45** |

### 6.8 ஆராய்ச்சி நூலகம் மற்றும் வெளியீடுகள்

இப்பிரிவு பின்வரும் பணிகளை நிறைவேற்றுகின்றது.

நகர, உள்ளூர் அபிவிருத்தி என்பனவற்றில் ஆராய்ச்சிகள், கற்கைகள் என்பனவற்றில் பொறுப்பேற்று ஊக்குவித்தல் அத்துடன் உள்ளூர் அதிகார சபைகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அவர்களது ஆற்றல்களை மேம்படுத்துவதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் இப்பிரிவு பொறுப்பேற்கின்றது.

சம்பந்தப்பட்ட கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அமுல் நடத்துபவர்களிடையே ஆராய்ச்சி கண்டு பிடிப்புகளைப் பரப்புதல்.

- சர்வதேச செயற்கூடங்கள்
- கருத்தரங்குகள்
- ஆளுகைச் சஞ்சிகை
- செய்தித் தாள்
- ஏனைய வெளியீடுகள்

தேசிய சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஆட்சித்துறையில் தொடர்புகள்

- LOGOTRY, UNESCAP
- UNDP, USAID
- JICA, ESCAP
- KILA ஆகியன

புதிய ஆராய்ச்சித் தொடக்கங்களுக்காக முக்கியமான பகுதிகளைக் கண்டெடுத்தல். உள்ளூராட்சி மன்றுகளின் உப-விதிகளைத் தயாரித்து அமுல் நடத்துதல் பற்றிய LOGOTRI செயற்றிட்டத்துடன் உள்ளூராட்சி மன்றுகளின் வருமானத்தைப் பெருக்குதல்.

ஆவணப்படுத்துல் மற்றும் தகவல் சேவைகள்

- மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி மன்றுகளுக்கும் தரவுத்தளத்தை உருவாக்குதல்.
- சஞ்சிகைகள் தகவல் ஏடுகளைப் பிரசுரித்தல்
- கவனஞ் செலுத்தப்பட்ட விடயங்களில் ஆவணப்படுத்தலும், ஆராய்ச்சி வெளியீடுகளும்
- வழிகாட்டிகளும், கைநூல்களும்
- நூலகச் சேவைகளை வழங்குதல்

ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து பயன்படுத்தப்பட்ட
நிதி(இலங்கை ரூபா 000’) - ரூபா 1,974
முடிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்கூடங்கள்.செயற்பாடுகள் - 52
நிதிப்பயன்பாட்டு வீதம் - 99%

| | **நிகழ்ச்சித்திட்டம், செயற்பாடு** | **திட்ட இல.** | **நாட்கள் எண்ணிக்கை** | **பங்குபற்றிய வர்களின் எண்ணிக்கை** | **உண்மையான செலவு** |
|---|---|---|---|---|---|
| 01 | ஆராய்ச்சி – மாகாண சபைகளின் வருமானத்தைப் பெருக்குதல் | | 18 | | 675,604.04 |
| 02 | சனத் தொகை வளர்ச்சிச் செறிவில் ஆராய்ச்சிக் கற்கை | | | | 210,000.00 |
| 03 | சனத் தொகை வளர்ச்சிச் செறிவில் கருத்தருங்கு | | | | 33,598.00 |
| 04 | மாகாண சபைகளின் சட்டவாக்க அதிகாரங்கள் பிரயோகம் பற்றிய ஆராய்ச்சிக் கற்கை | | | | 185,000.00 |
| 05 | மாகாண சபைகளின் சட்டவாக்க அதிகாரங்கள் பிரயோகம் பற்றிய ஆராய்ச்சிக் கற்கை | | | | 210,000.00 |
| 06 | கணக்கெடுப்பேர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம் | | | | 230,838.80 |
| 07 | ஆராய்ச்சி முறையைப் பற்றிய சான்றிதழ், கற்கை நெறி | | 31 | | 363,023.50 |
| 08 | வெளியீடுகள் | | | | 66,227.92 |
| | **உப மொத்தம்** | | **49** | | **1,974,292.26** |

## 8. நிதி பற்றிய தகவல்

### 8.1 நிதிச் செயற்பாடு பற்றிய குறிப்பேடு

31.12.2011 முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்புகள் | 31.12.2011 | 31.12.2010 |
|---|---|---|---|
| **நடவடிக்கை வருமானம்** | | | |
| அரசாங்க பங்களிப்பு – மீண்டு வருவது | 01 | 39,176,000.00 | 36,811,000.00 |
| பிற வருமானம் | 02 | 27,500,700.66 | 20,257,790.88 |
| **மொத்த நடவடிக்கை வருமானம்** | | **66,676,700.66** | **57,068,790.88** |
| நடவடிக்கைச் செலவுகள் | 03 | 25,384,254.22 | 24,091,582.05 |
| நிர்வாக மற்றும் தாபனச் செலவுகள் | 04 | 15,309,284.15 | 14,803,925.41 |
| ஆலோசனைச் சேவைச் செலவுகள் | 05 | 21,265,772.13 | 14,373,838.56 |
| ஏற்பாடுகள் | 06 | 1,835,335.74 | 1,544,171.97 |
| **மொத்த நடவடிக்கை வருமானம்** | | **63,794,646.24** | **54,813,517.99** |
| **ஆண்டுக்கான மேல்மிச்சம்.'.குறைவுகள்** | | **2,882,054.42** | **2,255,272.89** |

## 8.2 31.12.2011 ல் இருந்த படி நிதி நிலைமை பற்றிய குறிப்பு

| சொத்துக்கள் | குறிப்புகள் | 31.12.2011 | 31.12.2010 |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாத ஆதனங்கள்** | | | |
| சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் பொறி | 07 | 10,573,457.05 | 5,586,122.94 |
| | | **10,573,457.05** | **5,586,122.94** |
| நடைமுறை ஆதனங்கள் | 08 | 2,142,079.67 | 1,685,841.17 |
| பங்குகள் | 09 | 1,556,630.91 | 6,300,966.57 |
| முற்கொடுப்பனவுகளும் கிடைக்க வேண்டியனவும் | 10 | 11,890,033.66 | 11,889,688.44 |
| பணமும் பணத்துக்குச் சமமானவையும் | 11 | 3,606,403.79 | 7,072,826.51 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **19,195,148.03** | **26,949,322.69** |
| | | **29,768,605.08** | **32,535,445.63** |
| | | **29,768,605.08** | **32,535,445.63** |
| **ஒப்புறவும் பொறுப்புகளும்** | | | |
| அரசாங்க உதவு தொகை – மூலதனம் | | 12,585,195.41 | 8,385,195.41 |
| ஒன்று சேர்ந்த நிதி | | 8,580,080.69 | 8,642,546.73 |
| UNDP கொடை | | 714,658.79 | 714,658.79 |
| கருத்திட்ட உதவு தொகை - மூலதனம் | | 1,595,824.75 | 1,595,824.75 |
| ஆசிய பவுன்டேசனின் பொறுப்புகள் | | 291,000.00 | 291,000.00 |
| | | **23,766,759.64** | **19,629,225.68** |
| **நடைமுறையற்ற பொறுப்புகள்** | | | |
| ஓய்வூதிய வசதிக் கடப்பாடுகள் | 12 | 3,055,300.00 | 2,432,923.50 |
| | | **3,055,300.00** | **2,432,923.50** |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| ஏற்பாடுகள்-கணக்காய்வுக் கட்டணம் | | 300,000.00 | 200,000.00 |
| கடனாளிகளும் ஒன்று சேர்ந்த கட்டணங்களும் | 13 | 2,646,545.44 | 10,273,296.45 |
| | | **2,946,545.44** | **10,473,296.45** |
| | | **29,768,605.08** | **32,535,445.63** |

## 8.3 31.12.12011ல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்று சேர்ந்த பணவோட்டக் குறிப்பேடு

| | | 31-12-2011 |
|---|---|---|
| **நடவடிக்கைச் செயற்பாடுகளிலிருந்து பண ஓட்டங்கள்** | | |
| அதிகமானது/(குறைவு) சாதாரண நடவடிக்கைகளிலிருந்து | | 2,882,054.42 |
| **பணமல்லாத அசைவுகளுக்கான மாற்றங்கள்** | | |
| தேய்வு | | 1,042,882.99 |
| ஏற்பாடுகள் - பணிக் கொடை | | 692,452.75 |
| ஏற்பாடுகள் - கணக்காய்வுக் கட்டணங்கள் | | 100,000.00 |
| முந்திய ஆண்டு மாற்றங்களும் | | (2,944,520.46) |
| **செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான நடவடிக்கை மிச்சம்** | | **1,772,869.70** |
| (அதிகரிப்பு) குறைவு பொருட்பட்டியல்கள்/ கடனாளிகள்/ ஏனைய கிடைக்க வேண்டியவை | | 4,287,751.94 |
| (அதிகரிப்பு) குறைவு கடனாளிகள்/ செலுத்த வேண்டியவை | | (7,626,751.01) |
| **நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட பணம்** | | **(1,566,129.37)** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | | (70,076.25) |
| செலுத்தப்பட்ட ஆய்வுக் கட்டணம் | | - |
| **நடவடிக்கைகளிலிருந்து தேறிய பணம்** | | **(1,636,205.62)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பண ஓட்டம்** | | |
| சொத்துக்கள் பெற்றமை | | (1,830,217.10) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய பணம் ஓட்டம்** | | **(1,830,217.10)** |
| **நிதியளித்தல் செயற்பாட்டிலிருந்து பணஓட்டங்கள்** | | |
| முதலீட்டுக் கொடுப்பனவு | | **-** |
| **நிதியளித்தல் செயற்பாட்டிலிருந்து தேறிய பண ஓட்டம்** | | - |
| **இவ்வாண்டில் தேறிய அசைவு** | | (3,466,422.72) |
| காலப்பிரிவின் தொடக்கத்தில் பணமும் பணத்துக்குச் சமமானவையும் | | 7,072,826.51 |
| காலப்பிரிவின் இறுதியில் பணமும் பணத்துக்குச் சமமானவையும் | **குறிப்பு “அ”** | **3,606,403.79** |

**குறிப்பு அ**

வங்கியில் பணம்

| | |
|---|---|
| வங்கியில் பணம் - இலங்கை வங்கி – கணக்கு இல.2323344 | 2,976,395.13 |
| வங்கியில் பணம் - இலங்கை வங்கி – கணக்கு இல.2323350 | 483,058.00 |
| சேமிப்புக் கணக்கு இலங்கை வங்கி – கணக்கு இல.2329975 | 146,950.66 |
| | 3,606,403.79 |

8.4 தேறிய சொத்துகளில் மாற்றங்கள் பற்றிய குறிப்பு – மொத்தம் - ரூபா

31.12.2011 ல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| விபரம் | அரசாங்க உதவு தொகை முதல் ரூபா. | ஒன்று சேர்ந்த நிதி ரூபா. | UNDP கொடை ரூபா. | கருத்திட்ட உதவு தொகை ரூபா. | ஆசிய நிறுவனத்திக் கொடை ரூபா. | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 01.01.2011ல் மீதி | **8,385,195.41** | **8,642,546.73** | **714658.79** | **1595824.75** | **291,000.00** | **19,629,225.68** |
| மிச்சம் / காலத்துக்குக் குறை | - | 2,882,054.42 | - | - | - | **2,882,054.42** |
| காலத்துக்கான மாற்றம் | 4,200,000.00 | - | - | - | - | **4,200,000.00** |
| முந்தை – ஆண்டு மாற்றங்கள் | - | (2,944,520.46) | - | - | - | **(2,944,520.46)** |
| 31.12.2011ல் 2 மீதி | **12,585,195.41** | **8,580,080.69** | **714,658.79** | **1,595,824.75** | **291,000.00** | **23,766,759.64** |

## 8.4 31.12.2011ல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகளுக்கான குறிப்புக்கள்

### குறிப்பு 01 அரசாங்க உதவு தொகை – மீண்டு வருவது

| | | 31-12-2011 | 31-12-2010 |
|---|---|---|---|
| 2100- 02 | பொதுத்திறைசேரி | 39,176,000.00 | 36,811,000.00 |
| | **மொத்தம்** | 39,176,000.00 | 36,811,000.00 |

### குறிப்பு – 02 ஏனைய வருமானம்

| | | | |
|---|---|---|---|
| 1505 -01 | பல்லின வருமானம் | 61,500.60 | 157,950.05 |
| 1506 -02 | ஊழியர் கடன் மீதான வட்டி | 418,459.05 | 462,291.63 |
| 1507 -03 | வெளியீடுகள் விற்பனை | 105,338.25 | 117,085.50 |
| 1508 -04 | காப்புறுதிக் கோரிக்கைகள் | 16,974.00 | - |
| 1509 -05 | FD&SA மீதான வட்டி | 15,414.65 | 310,343.42 |
| 1510 -06 | கண்டலம சுற்றுலா விடுதி | - | 2,500.00 |
| 1511 -07 | வாடகை வருமானம் | 597,500.00 | 45,000.00 |
| 1512 -08 | நிலையான சொத்துக்கள் விற்பனை | - | 243,339.00 |
| 2101- 01 | கணனிப் பிரயோகம் பற்றிய சான்றிதழ் பாடநெறி | 467,500.00 | 525,000.00 |
| 2101- 03 | UNDP- Art Gold- கருத்திட்டம் -ஊவா மாகாணம் | 1,928,210.00 | 342,000.00 |
| 2101- 04 | முற்பணக்கணக்கு – பொது | 893,320.00 | 3,672,582.50 |
| 2101- 05 | ஆசிய நிறுவனம் | 148,120.00 | - |
| 2101- 06 | இலங்கை உள்ளூர் ஆளுகைப் பேரவை – அதிகாரமளிக்கப்பட்ட | 180,000.00 | - |
| 2101- 10 | உள்ளூராட்சி டிப்ளோமா பாடநெறி | 3,051,220.00 | 2,937,500.00 |
| 2101- 12 | சுற்றாடல் படங்கள் | 100,000.00 | 1,128,000.00 |
| 2101- 13 | உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் | 5,135,050.00 | 5,073,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 2101- 15 | கிராம வீதி அகலமாக்கல் பிரதான கருத்திட்டம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | 9,012,249.56 | 1,586,073.78 |
| 2101- 16 | உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் II | 5,369,844.55 | 3,655,125.00 |
| | **மொத்தம்** | **27,500,700.66** | **20,257,790.88** |

**குறிப்பு -03 நிருவாக மற்றும் தாபனச் செலவுகள்**

| | | | |
|---|---|---|---|
| 1503-01-01 | தனிப்பட்ட கொடுப்பனவுகள் - சம்பளங்களும், ஊதியமும் | 14,388,599.11 | 13,466,616.16 |
| 1503-01-02 | தனிப்பிட்ட கொடுப்பனவுகள் - ஊ.சே.நி | 1,609,780.66 | 1,493,453.93 |
| 1503-01-03 | தனிப்பிட்ட கொடுப்பனவுகள் - ஊழியர் நம்பிக்கை நிதி | 398,972.34 | 374,199.32 |
| 1503-01-04 | தனிப்பிட்ட கொடுப்பனவுகள் - விடுமுறைக் கொடுப்பனவுகளும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளும் | 498,847.97 | 597,442.70 |
| 1503-01-05 | தனிப்பிட்ட கொடுப்பனவுகள் - ஏனைய கொடுப்பனவுகள் | 345,900.35 | 382,776.00 |
| 1503-02-01 | போக்குவரத்துச் செலவுகள் - உள்ளூர் | 301,908.30 | 330,535.25 |
| 1503-03-01 | வழங்குதல் - எழுதுகருவி வகை | 1,068,053.69 | 1,031,615.42 |
| 1503-03-02 | வழங்குதல் - எண்ணெய் வகை | 1,280,074.87 | 963,428.50 |
| 1503-03-03 | வழங்குதல் - சீருடை | 24,495.00 | 24,680.00 |
| 1503-04-01 | பேணுகைச் செலவு – வாகனங்கள் | 1,673,899.27 | 997,625.62 |
| 1503-04-02 | பேணுகைச் செலவு – இயந்திரம், பொறிகள் உபகரணங்கள் | 421,935.89 | 392,028.08 |
| 1503-04-03 | பேணுகைச் செலவு – கட்டிடம் | 646,633.08 | 443,625.34 |
| 1503-05-01 | ஒப்பந்தச் சேவைகள் – வாடகை/ கட்டிடச்சேவை | - | 240,000.00 |
| 1503-05-02 | ஒப்பந்தச் சேவைகள் – தொலைபேசி | 636,014.49 | 584,898.84 |
| 1503-05-03 | ஒப்பந்தச் சேவைகள் – தபாற்கட்டணங்கள் | 62,285.00 | 91,792.00 |

| | | | |
|---|---|---|---|
| 1503-05-04 | ஒப்பந்தச் சேவைகள் – நீர்,மின்சாரம் | 978,024.24 | 938,981.28 |
| 1503-05-05 | ஒப்பந்தச் சேவைகள் – பத்திரிகைகள், சஞ்சிகைகள் | - | 20,025.00 |
| 1503-05-06 | ஒப்பந்தச் சேவைகள் – பாதுகாப்புச் சேவைகள் | 684,656.25 | 1,056,296.00 |
| 1503-05-07 | ஒப்பந்தச் சேவைகள் – ஏனையவை | 364,173.71 | 296,369.28 |
| 1503-06-02 | கண்டலம சுற்றுலா விடுதி | - | 365,193.33 |
| | **மொத்தம்** | **25,384,254.22** | **24,091,582.05** |

<u>குறிப்பு -04 மனித வள அபிவிருத்திச் செலவுகள்</u>

| | | | |
|---|---|---|---|
| 2201-05-01 | **மனித வள அபிவிருத்தி – தேசிய மட்டப் பயிற்சி** | **9,973,253.68** | **11,866,862.28** |
| 2201-05-01-01 | மனித வள அபிவிருத்தி – தேசிய மட்டப் பயிற்சி மனித வள அபிவிருத்தி | 1,982,069.61 | 1,789,146.36 |
| 2201-05-01-02 | மனித வள அபிவிருத்தி – தேசிய மட்டப் பயிற்சி– பொறியியல் | 307,266.13 | 1,005,866.96 |
| 2201-05-01-03 | மனித வள அபிவிருத்தி– தேசிய மட்டப் பயிற்சி– பொதுமுகாமை | 1,226,477.17 | 1,516,663.52 |
| 2201-05-01-04 | மனித வள அபிவிருத்தி – தேசிய மட்டப் பயிற்சி – திட்டமிடுதல் | 1,456,210.73 | 1,238,310.95 |
| 2201-05-01-05 | மனித வள அபிவிருத்தி – தேசிய மட்டப் பயிற்சி – நிதித்துறை முகாமை | 1,664,702.75 | 3,077,777.15 |
| 2201-05-01-06 | மனித வள அபிவிருத்தி – தேசிய மட்டப் பயிற்சி– சட்டம் | 1,565,936.04 | 1,377,319.67 |
| 2201-05-01-07 | மனித வள அபிவிருத்தி – தேசிய மட்டப் பயிற்சி– கல்வி சார்ந்தது | 1,770,591.25 | 1,861,777.67 |
| 2201-05-02 | மனித வள அபிவிருத்தி – மாகாண மட்டப் பயிற்சித்திட்டம் | 862,878.57 | 705,524.50 |
| 2201-05-03 | மனித வள அபிவிருத்தி – SLILG யின் ஆற்றல் வளர்ப்பு | 1,932,364.95 | 745,688.30 |
| 2201-05-04 | மனித வள அபிவிருத்தி – ஆராய்ச்சி, நூலகம், வெளியீடுகள் | 2,162,777.95 | 1,169,460.33 |
| 2201-05-05 | மனித வள அபிவிருத்தி – கணனிப் பிரயோகம் பற்றிய சான்றிதழ் | 378,009.00 | 316,390.00 |

| | | | |
|---|---|---|---|
| | **மொத்தம்** | **15,309,284.15** | **14,803,925.41** |

**<u>குறிப்பு 05 ஆலோசனைச் சேவைகள் செலவுகள்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1504-01 | இலங்கை உள்ளூராட்சிப் பேரவை – அதிகாரமளித்தது | 79,879.50 | - |
| 1504-02 | முகாமை டிப்ளோமா – UNDP-SL – ஊவா மாகாணம் | 2,220,588.55 | 3,068,515.56 |
| 1504-03 | முகாமை டிப்ளோமா – UNDP-SL – தெற்கு மாகாணம் | 28,525.67 | 193,342.15 |
| 1504-05 | செலவுக் கணக்கு – பொது | 2,561,223.94 | 4,409,771.89 |
| 1504-10 | உள்ளூராட்சி உட்கட்டமைப்ப அபிவிருத்திக் கருத்திட்டம் | 4,900,400.09 | 4,738,593.34 |
| 1504-11 | உள்ளூராட்சி உட்கட்டமைப்ப அபிவிருத்திக் கருத்திட்டம் | 5,369,844.55 | - |
| 1504-12 | சுற்றாடல் படங்கள் | 41,508.00 | 487,455.84 |
| 1504-13 | கிராம வீதிகள் அகலமாக்கள் பிரதான கருத்திட்டம் மாகாண கபைகள், உள்ளூராட்சி அமைச்சு | 6,063,801.83 | 1,476,159.78 |
| | **மொத்தம்** | **21,265,772.13** | **14,373,838.56** |

**<u>குறிப்பு 06 ஏற்பாடுகள்</u>**

| | | | |
|---|---|---|---|
| 2102-03 | ஏற்பாடுகள் - பணிக்கொடை | 692,452.75 | 656,480.00 |
| 2102-04 | ஏற்பாடுகள்- கணக்காய்வுக் கட்டணங்கள் | 100,000.00 | 110,716.00 |
| 2105-02 | தேய்வு - இயந்திரங்களும் அலுவலகக்கருவிகளும் | 941,195.67 | 675,288.65 |
| 2105-03 | தேய்வு – நூலகப் புத்தகங்கள் | 15,359.32 | 15,359.32 |
| 2105-04 | தேய்வு – வாகனம் | 64,998.00 | 64,998.00 |
| 2106-03 | தேய்வு – தளபாடங்கள் பொருத்தப்பட்ட கருவிகளும் | 21,330.00 | 21,330.00 |
| | **மொத்தம்** | **1,835,335.74** | **1,544,171.97** |

**<u>குறிப்பு 07 சொத்து இயந்திரம் மற்றும் கருவிகள்</u>**

| | | 01-01-2011ல் பெறுமதி | சேர்க்கப்பட்டவை-2011 | அகற்றப்பட்டவை -2011 | தேய்வு - 2011 | ஒன்று சேர்ந்த தேய்வு | WDV 31-12-201 ல் | WDV 31.12.2010 ல் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2201-01 | வாகனங்கள் | *325,290.00* | *4,200,000.00* | - | *64,998.00* | *136,921.33* | *4,388,368.67* | *195,294.00* |
| 2201-02 | இயந்திரங்களும் அலுவலகக்கருவிகளும் | *14,016,929.36* | *1,830,217.10* | - | *941,195.67* | *9,840,935.96* | *6,006,210.50* | *5,117,189.07* |
| 2201-03 | நூலகப் புத்தகங்கள் | *153,593.20* | - | - | *15,359.32* | *145,355.32* | *8,237.88* | *81,669.87* |
| 2201-04 | தளபாடங்களும் பொருத்தப்பட்வையும் கண்டலம சுற்றுலா | *213,300.00* | - | - | *21,330.00* | *42,660.00* | *170,640.00* | *191,970.00* |
| | | ***14,709,112.56*** | ***6,030,217.10*** | **-** | ***1,042,882.99*** | ***10,165,872.61*** | ***10,573,457.05*** | ***5,586,122.94*** |

**குறிப்பு 08 இருப்புக்கள்**

| | | | |
|---|---|---|---|
| 2202-01 | இருப்புக்கள் - எழுதுகருவி வகை | 558,907.31 | 244,074.41 |
| 2202-02 | இருப்புக்கள் - வெளியீடுகள் | 1,583,172.36 | 1,441,766.76 |
| | **மொத்தம்** | **2,142,079.67** | **1,685,841.17** |

**குறிப்பு 09 - முற்கொடுப்பனவுகளும் கிடைக்க வேண்டியவையும்**

| | | | |
|---|---|---|---|
| 2100-09 | கிடைக்க வேண்டியவை கணக்கு – ருனுயு நகர அபிவிருத்தி அதிகார சபை | - | 4,041,237.43 |
| 2206-01 | முற்கொடுப்பனவுகள் - காப்புறுதி | 50,992.62 | - |
| 2206-02 | முற்கொடுப்பனவுகள் - வாடகை, தபால் அதிபர் நாயகம் கிடைத்த ஏனையோர் | 78,518.29 | 202,949.64 |
| 2206-04 | வேண்டிய கணக்கு- ஆலோசனைச் சேவை | 1,075,500.00 | 1,875,219.50 |
| 2206-05 | மாகாண கபைகள் மற்றும் உள்ளூராட்சி | 351,620.00 | 181,560.00 |
| | **மொத்தம்** | **1,556,630.91** | **6,300,966.57** |

**குறிப்பு 10 – கடனாளிகளும் முற்பணமும்**

| | | | |
|---|---|---|---|
| 2203-01 | பதவியாசம் கடனாளிகள் | 189,442.02 | 8,442.02 |
| 2203-03 | சில்லறைக் கடனாளிகள் | 107,732.99 | 17,150.00 |
| 2204-02 | விசேட முற்பணம் | 4,350.00 | 4,600.00 |
| 2204-04 | பெருநாள் முற்பணம் | 41,300.00 | 57,300.00 |
| 2204-05 | பதவியாசர் கடன் | 11,547,208.65 | 11,802,196.42 |
| | **மொத்தம்** | **11,890,033.66** | **11,889,688.44** |

**குறிப்பு 11 – பணமும் பணத்துக்குச் சமமானவையும்**

| | | | |
|---|---|---|---|
| 2207-02 | இலங்கை வங்கி – கணக்கு இல. 2323344 | 2,976,395.13 | 263,632.85 |
| 2207-03 | இலங்கை வங்கி – கணக்கு இல. 2323344 | 483,058.00 | 6,768,008.71 |
| 2207-04 | சேமிப்புக் கணக்கு இலங்கை வங்கி – கணக்கு இல. | 146,950.66 | 41,184.95 |
| | **மொத்தம்** | **3,606,403.79** | **7,072,826.51** |

**குறிப்பு 12- ஓய்வூதிய நலன்கள் கடப்பாடுகள்**

| | | |
|---|---|---|
| 01.01.2011ல் மீதி | 2,432,923.50 | 1,776,443.50 |
| இக்காலகட்டத்தில் ஏற்பாடுகள் | 629,452.75 | 656,480.00 |
| செலுத்தப்பட்ட உண்மையான தொகை | (70,076.25) | - |
| **31.12.2011 மீதி** | **2,992,300.00** | **2,432,923.50** |

**குறிப்பு 13 கடன் காரர்களும்/ ஒன்று சேர்ந்த கட்டணங்களும்**

| | | | |
|---|---|---|---|
| 2103-01 | ஒன்று சேர்ந்த கட்டணங்கள் | 2,200,604.99 | 10,213,046.45 |
| 2103-02 | வைப்புக்கள் -கேள்விப்பத்திரங்கள் | 59,250.00 | 60,250.00 |
| 2103-03 | முற்பணமாகக் கிடைத்த நிதியம் - LGIIP II | 386,690.45 | - |
| | **மொத்தம்** | **2,646,545.44** | **10,273,296.45** |

## 9.0 முடிவுரை

SLILG, 2011ம் ஆண்டில் அதன் இலக்குகளையும், எதிர்பார்ப்புக்களையும் திருபதிகரமாக எய்தித் தனது பணிகளை நிறைவேற்றியுள்ளது என்பது எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்காக திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாய் பணமும் எம்மால் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதன் விளைவாக உள்ளூராட்சி மன்றங்களின் ஆற்றல்களும், செயற்பாடுகளும் திருப்திகரமான மட்டத்துக்கு முன்னேறியுள்ளன. விஷேடமாக, உள்ளூராட்சி மன்றங் களின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பணியாளர்களின் மனங்களில் மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் தொடர்பாக ஒரு உடன்பாடான மனநிலையினைக் கட்டியெழுப்புவதற்கான எமது முயற்சிகள் விரும்பத்தக்க முடிவுகளைத் தரத் தொடங்கியுள்ளன.

எவ்வாறெனினும், கருதுகோள் அளவில் மட்டும் அறிவை வழங்குவதைவிட, பயனை நோக்கிய அறிவை (Result Oriented) வழங்குதலில் SLILG யின் பணிகள் மேலும் விருத்தி செய்யப்படலாம் என்பது அவதானிக்கப்படுகின்றது. துணைச்சட்டங்களை வரைவதற்கும், இறுதிக் கணக்குகளை தயாரிப்பதற்கும் தமது பணியாளர்களை விஷேடமாகப் பயிற்றுவிக்குமாறு உள்ளூராட்சி மன்றங்கள் எமக்கு பெருமளவில் கோரிக்கை விடுக்கின்றன. அதனை SLILG ஏற்றுக் கொண்டுள்ளது. எம்மிடம் இருக்கும் மனிதவளம் மற்றும் நிதிவளம் என்பன அனுமதிக்கின்ற அளவுக்கு இது நடைமுறைப்படுத்தப்படும்.

எவ்வாறெனினும், LGIIP கருத்திட்டத்தின் நிதி அனுசரணையுடன், 2011ம் ஆண்டில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை கருதுகோள் அடிப்படையில் பயிற்றுப்பதற்கு SLILG தொடங்கியிருந்தது.

மாகாணங்களுடனான ஒத்துழைப்பைப் பொறுத்தவரை, இருபக்க ஆலோசனைகள் இருக்க முடியுமெனின் SLILG ற்றும் மாகாண MDTU க்கள் இடையிலான ஒத்துழைப்பு மேலும் வலுப்பெற்று, அவற்றின் மனிதவளம் மற்றும் பொருள் வளங்கள் பங்கிடப்பட முடியுமென்பதோடு, இந்த ஒத்துழைப்பின் பிரதிபலன்கள் மக்களைச்சென்றடையும் என்பதிலும் சந்தேகமில்லை.

உதாரணங்கள் பலவற்றைக் குறிப்பிட முடியும். SLILG க்கும் ஊவா மாகாணத்தின் MDTU க்குமிடையிலான ஒத்துழைப்பின் பயனாக பல்கஹதென்னவில் சிங்கள மொழியில் உள்ளூராட்சி டிப்ளோமாவையும், அதேபோன்று கிழக்கு மாகாண MDTU க்கும் எமக்குமிடையிலான ஒத்துழைப்பின் பயனாக தமிழ் மொழியில் உள்ளூராட்சி டிப்ளோமா பயிற்சி நெறியை திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் நாம் நடாத்திச்செல்வது அவதானிப்புக்குரிய விடயமாகும்.

மேலும், பயிற்றுவிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்களினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பயன்கள் கிடைத்தனவா என ஆராய்தலும் முக்கியமான தாகும். எமது பயிற்சிகளில் பங்குபற்றும் உள்ளூராட்சி மன்றுகளின் பிரதான நிறைவேற்று

அலுவலர்கள் அத்தகை பயன்கள் பற்றிய தகவல்களை எமக்களிக்கின்றனர். எனினும் இதற்கும் அப்பால் சென்று, உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாட்டின் தரத்தை நோக்குவதற்கு வேறு சில காத்திரமான முறைகளைக் கையாளுவது பற்றியும் இப்போது சீர்தூக்கிப்பார்க்கப்படுகின்றது.

இத்தகை தகவல்களை நாம் பெற்றுக்கொள்வதன்வாயிலாக பயிற்சிகளுக்கான பாடவிதானங்களிலும், பயிற்சியளிக்கும் முறைகளிலும் பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு வழியேற்படும்.

உள்ளூராட்சித் துறைக்கு, உசாத்துணை விடயங்களை வழங்குவதற்கு நிறுவனத்தின் நூலகத்தை மேலும் விருத்தி செய்ய வேண்டிய அத்தியாவசியத் தேவையும் எழுந்துள்ளது.

உள்ளூராட்சியுடன் தொடர்பான கணனி மென்பொருட்கள் பற்றிய அறிவை (ICT) உ. ஆ. நிறுவனங்களின் பணியாளர்களுக்கு வழங்குவது தற்போதுள்ள முக்கிய தேவைப்பாடுகளில் ஒன்றாகும். அதனைக் கருத்திக் கொண்டு, SLILG யின் கணனிப் பிரிவு இப்போதிருப்பதை விட நல்ல முறையில் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். நிதிப்பற்றாக்குறை காரணமாக, 2011ல் இது நடைபெறவில்லை.

நிறுவகத்தின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும், சேவைகளுக்கும் கிராக்கி அதிகரித்து வருவதனால் போதிய கட்டிட வசதியும் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகளை நடத்தக்கூடிய ஏனைய வசதிகளும் பெறப்படுதல் வேண்டும். இந்நிறுவனம் 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த கட்டிடத்தில் அமைந்துள்ளதால், மேலும் விரிவுபடுத்தல் கடுமையாகத் தடையாகியுள்ளது. எனவே நான்கு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது SLILG கட்டிடம் அமைந்துள்ள காணியின் அரைப்பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ளது. எமது கட்டிடம் அமைந்துள்ள இந்தக்காணி ஏற்கனவே இந்த நிறுவனத்திற்காகச் சுவீகரிக்கப்பட்டுள்ளது. காணி உறுதியும் எமக்குக் கிடைத்துள்ளது.

உத்தேச கட்டிடத்தில் அலுவலக வசதியுடன் பின்வரும் வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன: கேட்போர்கூடம், விரிவுரை மண்டப வசதிகள், கட்புல செவிப்புல வசதிகள், நூலகம், சிற்றூண்டிச்சாலை என்பன. அத்துடன் பங்குபற்றுவோர்களையும், பயிற்சியாளர்களையும், வளவாளர்களையும், பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளிலும் ஆலோசனைச் சேவைகளிலும் பங்குபற்றுவோர்களையும் கவருவதற்காக வதிவிட வசதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளன.

2011ம் ஆண்டில் பொதுத் திறைசேரி எமக்குப் பின்வரும் வசதிகளை ஏற்படுத்தியளித்தமை குறிப்பிடத்தக்கது. ஆவையாவன: குத்தகை அடிப்படையில் இரண்டு மோட்டார் வண்டிகளையும், ஒரு பயணிகள் கோச்சையும் நாம் திறைசேரி மூலம் பெற்றுக்கொண்டோம். ஏனெனில், பயிற்சி நெறிகளை நடாத்துவதற்காக நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் நாம் பயணஞ்செய்பவர்களாக இருக்கின்ற காரணத்தினால் எமது மிகப்பழைய வண்டிகளை மாற்றீடு செய்தல் அவசியமானதாக இருந்தது. இதே காரணத்திற்காக, இன்னுமொரு பயணக் கோச்சையும், இரட்டைக்கப் வண்டியொன்றையும் (DOUBLE CAB) நாம் திறைசேரயிடம் கோரியுள்ளதுடன் அவை எமக்குக் கிடைக்கும் எனவும் நம்புகின்றோம். அத்தோடு, திறைசேரியின் அறிவுறுத்தலுக்கேற்ப, பழைய வாகனங்களை நாம் ஏலத்தில் விற்று, அதன் மூலம் கிடைத்த பணத்தையும் திறைசேரியில் வைப்பிலிட்டுள்ளோம்.

ஆகவே, 2011ம் ஆண்டானது உள்ளூராட்சிமன்றங்களின் பணியாளர்களின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதைப் பொறுத்தவரை, நடவடிக்கைகள் பலவற்றைக் கொண்ட ஆண்டாக இருந்தது என எம்மால் துணிந்து சொல்ல முடியும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2406 புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகளை நாம், உள்ளூராட்சிக் கருதுகோளின் சிறப்பான அம்சங்களைப் பற்றிப் பயிற்றுவிக்க வேண்டியிருந்தது. LGIIP திட்டத்தின் நிதி அனுசரணையுடன் நாம் இப் பணியை மிகச் சிறப்பாகச் செய்து முடித்தோம்.

**ஐ.ஏ. ஹமீட்**
**பணிப்பாளர்**
**இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்.**

2013 ஏப்ரல் 30

தலைவர்,
இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்.

**இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971இன் 38ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31ஆம் திகதிக்கான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மாற்றம் பற்றிய கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கங்களுடனான தகவல்களின் பொழிப்பைக் கொண்ட 2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971இன் 38ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(1)ஆம் பிரிவு மற்றும் 1999இன் 31ஆம் இலக்க இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவக அதிகாரச் சட்டத்தின் 18ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2. நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## 1.3. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

எனது கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிரயம், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினது மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவு செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக்கூடியதாயிருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருட்படுத்தக்கூடிய பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதை நியாயபூர்வமாக உத்தரவாதம் செய்யும் வகையில் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள வெளிப்படுத்தல்களையும் தொகைகளையும் ஆதரிக்கவல்ல சான்றுகளைக் கரீட்சித்தல், நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தால் கடைப்பித்த கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் முக்கிய மதிப்பீடுகள், நிதிக்கூற்றுக்களது ஒட்டுமொத்த சமர்ப்பணம் மீதான மீளாய்வு என்பவற்றைக் கணக்காய்வு உள்ளடக்கியது. எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் அமைய, கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு தேவையான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பன பெறப்பட்டன என்றும் அதற்கமைய எனது அப்பிராயத்திற்கான போதியளவு அடிப்படை எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது எனவும் நான் நம்புகின்றேன். 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் (3) மற்றும் (4)ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நர்மாணிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு கருத்துக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை என்பதும் அவை பொருத்தமானவை என்பதும் எனது நம்பிக்கையாகும்.

## 1.4. கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2. பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கணக்காய்வு பற்றிய கருத்துரை சமர்ப்பிக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனையிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதிஉயர் தகவல்கள் விளக்கங்கள் என்பவற்றுக்கமையவும் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் 2011 திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியுள்ளது. எனது இவ்வறிக்கையின் 2.2.ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31இல் உள்ளவாறான இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் நிதிசார் நிலைமை அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததென என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1. கணக்குகளில் இருந்து விடுபட்டிருத்தல்

2011 திசெம்பர் மாதம் 03 நாட்கள் நிறுவனத்தின் விரிவுரை மண்டபம் ஒன்றை வாடகைக்கு வழங்கியமைக்காக கிடைக்க வேண்டிய ரூபா 38,124 விரிவுரை மண்டப வாடகை கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2. கணக்காய்வுகளுக்கான சான்றுகளின்மை

2010 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 6,919,511 ஆன ஊழியர் கடன் தொடர்பான கோப்புகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3. சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள், முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| அ. | 1999 இன் 31ஆம் இலக்க இலங்கை உள்ளூர் ஆளுகை சட்டத்தின் 11(1)ஆம் பந்தி | ஆகக்குறைந்தது ஒவ்வொரு மாதமும் ஒரு முறை சபைக்கூட்டம் நடாத்தப்பட வேண்டுமாயினும் 2011ஆம் ஆண்டில் 8 சந்தர்ப்பங்களில் மாத்திரமே கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. |
| ஆ. | 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைகள் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கான திருத்தப்பட்ட 1530/13/2008 ஆம் இலக்க சனவரி 01ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை | 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளுக்கு ஊழியர் ஊதியத்தின் அடிப்படையில் ரூபா 12540 ஆன முத்திரை வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| இ. | 2011 ஏப்ரல் 18ஆந் திகதிய APTE/Tax/01/2011ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சுற்றறிக்கை | ஊழியர் ஒருவரின் உழைக்கும்போது செலுத்த வேண்டிய வரியைக் கணிப்பிடுவதில் சம்பளம், பணிக்கொடை மற்றும் வேறு கொடைகளை கவனத்தில் கொள்ள வேண்டுமாயினும் ஊழியர்களின் சம்பளம் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டு வரி மதிப்பிடப்பட்டுள்ளது. |
| ஈ. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| | (i) நி.பி. 757(2) | ஆண்டின் இறுதியில் கணிப்பீட்டு சபையினால் நிறுவனத்தின் சொத்துக்கள் பௌதீக ரீதியாக பரிசீலனை செய்யப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை. |
| | (ii) நி.பி. 145(ஆ) மற்றும் (இ), நி.பி. 1646 | இரண்டு வாகனங்கள் தொடர்பாக 2011ஆம் ஆண்டுக்கான வாகன ஓட்டம் பற்றிய குறிப்பு, இரண்டு வாகனங்கள் தொடர்பில் ஒரு மற்றும் மூன்று மாதங்களுக்கான ஓட்டக்குறிப்புகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| உ. | 2002 நவம்பர் 28ஆந் திகதிய | கணினி உதிரிப்பாகங்கள் மற்றும் |

| | சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| | IAI/2002/02ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மென்பொருள்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணிவரப் பட்டிருக்கவில்லை. |
| ஊ. | 2000 சனவரி 01ஆந் திகதிய PF/PE/05ஆம் இலக்க அரச நிதிகள் சுற்றறிக்கை | குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அமைச்சரவை, அரச நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரியினால் குறித்து அங்கீகரிக்கப்பட்டுள்ள பயன்கள் மாத்திரம் நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன் செலுத்த முடியுமாயினும் கருத்திட்டங்களுக்காக கிடைக்க வேண்டியிருந்த நிதிகளில் இருந்து நிறுவனத்தின் அலுவலர்கள் 37 பேருக்கு 10,000 ரூபா வீதம் மொத்தம் 370,000 ரூபா கருத்திட்டக் கொடுப்பனவாக செலுத்தப் பட்டிருந்தது. |
| எ. | பொதுநிர்வாக சுற்றறிக்கைகள் | |
| | 2008 ஜூன் 26ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை<br>(i) 04ஆம் பந்தி | பணிப்பாளரின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிதிசார் வரையறைக்குள் தமது கடமைசார் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். அந்த வரையறையையும் தாண்டி ரூபா. 286,349 ஆன மேலதிக எரிபொருள் பெறப்பட்டிருந்த போதிலும் அதற்கு அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. |
| | (ii) 07ஆம் பந்தி | குழுக்களை அழைத்துச் செல்வதற்காக நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்த வாகனங்கள் அலுவலகத்திலிருந்து சென்று வருவதற்கான 50 கி.மீ. உச்சளவான பயணத்தூரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும் வாகனம் ஒன்றின் மூலம் குழுக்களை கொண்டு செல்லும் போது இந்த வரையறையையும் தாண்டி 112 கி.மீ. பயணம் செய்யப்பட்டிருந்தது. |
| ஏ. | 2006 சனவரி 25ஆந் திகதிய அரசாங்க வழங்கல் வழிகாட்டல் தொகுப்பின் 3.4.3.(இ) வழிகாட்டல் தொகுப்பு | 2012ஆம் ஆண்டில் ரூபா 400,000 ஆன தினப்பதிவேடுகள் ஆயிரத்தைக் கொள்வனவு செய்ய பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் அன்றி மூன்று நிறுவனகங்களிடம் விலை மனுக்கள் கோரப்பட்டு கேள்வியை வழங்குவதற்கு வழங்கல் குழு தீர்மானித்திருந்தது. |

| | சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| ஒ. | 2010 திசெம்பர் 15ஆந் திகதிய நிர்வாக சபை தீர்மான இலக்கம் 87/04 | உத்தியோகபூர்வ கடமை நேரத்திற்குள் கருத்திட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக கொடுப்பனவுகளை செய்ய வேண்டாமென தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் கடமை நாட்களில் கடமை விடுமுறை பெற்றுக் கொண்டு கருத்திட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கான கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது. |

### 2.2.4. போதியளவு அதிகாரத்தின் மூலம் உறுதிசெய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011ஆம் ஆண்டின் கருத்திட்ட நிதியத்தில் இருந்து ரூபா 400,000 நிறுவனத்தின் பதவியணியினரின் நலன்புரிச் சங்கத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கருத்திட்ட நடவடிக்கைகளுக்கு பதவியணியினரின் கொடுப்பனவாக மொத்தம் ரூபா. 387,000 செலுத்தப்பட்டுள்ள நிலையில் 33ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் 4.1.3.ஆம் பிரிவுக்கு முரனாக அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மீளாய்வு ஆண்டில் திசெம்பர் மாத மொத்த சம்பளத்தில் 1/3 என்ற வகையில் மொத்தம் ரூபா. 759,435 ஆக கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1. நிதி பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களுக்கு அமைய மீளாய்வு ஆண்டில் நிறுவனத்தின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா. 2,882,054 ஆன மிகையாக காணப்பட்டதுடன் இதற்கு இசைவாக கடந்த ஆண்டின் மிகை ரூபா. 2,255,273ஆக இருந்ததனால் மீளாய்வு ஆண்டில் நிதிப்பெறுபேறு ரூபா. 626,781 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது.

### 3.2. விரிவான நிதி மீளாய்வு

நிதி பெறுபேரின் வளர்ச்சிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக அமைந்துள்ளன.

(அ) கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வு ஆண்டின் செயற்பாட்டு வருமானம் ரூபா. 9,607,910இனால் அதிகரித்து செயற்பாட்டு செலவினம் ரூபா. 8,981,128இனால் மாத்திரம் அதிகரித்துள்ளமை.

(ஆ) அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா. 2,365,000இனால் அதிகரித்துள்ளமையும் ஏனைய வருமானங்கள் ரூபா. 7,242,910இனால் அதிகரித்துள்ளமையும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றுகை

நிறுவனத்தின் பிரதான நோக்கங்களுக்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அவர்களின் கடமைகளை வினைத்திறனாகவும் உற்பத்திதிறனாகவும் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய வகையில் செயலமர்வுகளையும் பயிற்சிப் பாடநெறிகளையும் நடாத்துகின்ற பணிக்கு என மீளாய்வு ஆண்டில் ரூபா. 15,000,000 ஒதுக்கப்பட்டிருந்தது. இலக்காகக் கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அமைய நிறைவேற்றப்பட்ட செயலாற்றுகை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விபரங்கள் போதியளவாக இல்லாமையினால் நிகழ்ச்சித் திட்டங்களின் வெற்றிகரமான தன்மை பற்றி அவதானிக்க முடியவில்லை என்பதுடன் அதன் மதிப்பீட்டு மற்றும் உண்மையான விடயங்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| பிரிவு | மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் | வரவு செலவுத்திட்டம் மற்றும் செயல் ரீதியான திட்டத்துக்கு அமைய நடாத்தப்பட வேண்டிய பாடநெறிகள் | | | | | | மொத்தம் | செயலாற்றுகை | | | | | | மொத்தம் | உண்மையான செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஏனையவை | 01 நாள் | 02 நாள் | 03 நாள் | 04 நாள் | 05 நாள் | | ஏனையவை | 01 நாள் | 02 நாள் | 03 நாள் | 04 நாள் | 05 நாள் | | |
| மனித வளம் | 1500000 | 04 | 06 | 13 | | | | 23 | 03 | - | 14 | 01 | - | 01 | 19 | 1982070 |
| பொறியியல் | 1500000 | 01 | 06 | 16 | | | | 23 | 01 | 02 | 03 | | | | 06 | 307266 |
| பொது முகாமைத்துவம் | 1500000 | | 09 | 09 | 04 | | | 22 | | | 03 | 08 | | | 11 | 1565052 |
| பௌதீக திட்டமிடல் | 1500000 | | | 09 | | | 03 | 12 | | | 10 | | | 03 | 13 | 1315017 |
| நிதி முகாமைத்துவம் | 1500000 | 14 | | | 05 | | | 19 | | | 13 | 05 | 04 | | 22 | 1664603 |
| சட்டம் | 1500000 | | 13 | 12 | | | | 25 | 01 | 04 | 16 | | | | 21 | 1633082 |
| ஆராய்ச்சி | 1500000 | 09 | 01 | 06 | | | 04 | 20 | 03 | 31 | 09 | | | | 43 | 1974292 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதன் செயலாற்றுகை

(i) செயல் ரீதியான திட்டத்திற்கு அமைய பொறியியல் பிரிவின் 23 பல்வேறு பாடநெறிகளை நடாத்த திட்டமிட்டிருந்ததுடன் அதற்காக ரூபா. 1,500,000 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அவ்வாறாயினும் ரூபா. 307,266 ஆன செலவினத்தில் செயலமர்வுகள் மற்றும் பாடநெறிகள் 06 மாத்திரம் நடாத்தப்பட்டதுடன் ஏற்பாடு செய்யப்பட்ட தொகையில் ரூபா. 250,000 ஆன வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் செய்யப்படாதுள்ள நிகழ்ச்சித்திட்டம் ஒன்றுக்கு மாற்றப்பட்டிருந்தது. அதற்கமைய பொறியியல் பிரிவின் செயலாற்றுகை உத்தேச மட்டத்தில் 20%மாக இருந்தது.

(ii) பொது முகாமைத்துவப் பிரிவினால் 22 செயலமர்வுகளை நடாத்த திட்டமிட்டதுடன் அதற்காக ரூபா 1,500,000 ஆன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா. 1,565,052 ஆன செலவின் மூலம் 11 செயலமர்வுகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அதற்கமைய மொத்த ஏற்பாடுகளையும் பயன்படுத்தி திட்டமிடப்பட்டிருந்த செயலாற்றுகையில் அரைப்பகுதி மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(iii) சட்டத்தின் 3ஆம் பிரிவுக்கு அமைய மாகாண சபையின் உறுப்பினர்களுக்கு, அலுவலர்களுக்கு பயிற்சியை பெற்றுக்கொடுப்பதை நிறுவனத்தின் பணியொன்றாகக் கருதி 2011 இன் செயல் ரீதியான திட்டத்தில் மாகாண சபை அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்களை பயிற்றுவிக்கும் பாடநெறிகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான பயிற்சிப் பாடநெறி ஒன்றுக்கு மாகாண சபை அலுவலர்களோ உறுப்பினர்களோ பங்கேற்கச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) உள்ளூராட்சி பற்றிய டிப்ளோமா பாடநெறி மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் வடமாகாணத்தில் நடாத்தப்படுவதற்காக ரூபா. 975,000 ஆன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த பாடநெறி மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் இதற்கு ரூபா. 948,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) ஏனைய வசதிகளை செய்துகொடுத்தல்

நிறுவனத்தின் நூலகங்களை மேம்படுத்துவதற்காக ரூபா. 25,000 ஆன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகள் உள்ளூராட்சி பற்றிய டிப்ளோமா (தமிழ் மொழி மூலம்) நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

## 4.2. நோக்கத்திற்கு முரணான கொடுப்பனவுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத ஊடக ஆலோசகர் பதவியொன்றுக்கு நிர்வாக சபை தீர்மானத்தின் அடிப்படையில் 2010ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த அலுவலர் ஒருவருக்கு 2011ஆம் ஆண்டில் ரூபா. 627,891 ஆன சம்பளமும் கொடுப்பனவுகளும் செலுத்தப் பட்டிருந்தன.

(ஆ) ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த அலுவலக சிற்றூழியர் ஒருவர் மற்றும் சுற்றுலா விடுதி பங்களா பொறுப்பாளர் ஒருவர் அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மொத்தமாக ரூபா. 411,810 ஆன சம்பளம் மீளாய்வு ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3. குறைப் பயன்பாட்டுச் சொத்துக்கள்

2008 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 324,990 பெறுமதிமிக்க முச்சக்கர வண்டி மற்றும் ரூபா. 21,000 பெறுமதிமிக்க மேசை ஒன்றும் 08 கதிரைகளும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் வேன் வண்டியொன்று அகற்றப்படாது வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 4.4. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2009 சனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய 06 மாதகால அறிக்கைகள் தாமதமடைந்ததனால் ரூபா. 3432 மிகைக்கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

### 4.5. பதவியணியின் நிர்வாகம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையைப் பேணுவதற்கு முகாமை தவறியிருந்தது.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளவாறானவை | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| பதவிநிலை | 10 | 09 | 01 | - |
| பதவி நிலையல்லாத | 26 | 21 | 05 | - |
| சிற்றூழியர் | 07 | 09 | - | 02 |
| மொத்தம் | 43 | 39 | 06 | 02 |

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமை மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான பலவீனங்கள் நிறுவனத்தின் பணிப்பாளரது கவனத்துக்கு அடிக்கடி கொண்டுவரப்பட்டது.

பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) வாகன கட்டுப்பாடு

(ஆ) செயலமர்வுகளை நடாத்துதல்

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) ஊழியர் கொடுப்பனவுகள் செலுத்தல்

(உ) உள்ளகக் கணக்காய்வு

**ஒப்பம்: எச்.ஏ.எஸ். சமரவீர**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**